திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

பிப்ரவரி 2021

விலை ரூ.5/-

திருமலையில்
ரத ஸப்தமி
19-02-2021







01-01-2021 அன்று ஆங்கில வருடப் பிறப்பை முன்னிட்டு தி.தி.தே. சார்பில் மேதகு ஆந்திர மாநில ஆளுநர் திரு. பிஷ்வபூஷன் ஹரிசந்தன் அவர்களுக்கும் மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து ஸ்வாமி பிரசாதத்தை வழங்கிய தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பா ரெட்டி அவர்கள்









15-01-2021 வெள்ளிக்கிழமையன்று தி.தி.தே. சார்பில் ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டம் நரசராவ் பேட்டையில் நடைபெற்ற கோ(காமதேனு) பூஜை. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு.ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பா ரெட்டி அவர்கள், தி.தி.தே.செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள் பங்கு கொண்டனர்



ஸ கே$_4$ாஷோ த$_4$ார்தராஷ்ட்ராணாம்
ஹ்ருத$_3$யாநி வ்யத$_3$ாரயத் |
நப$_4$ச்ச ப்ருதி$_2$வீம் சைவ
துமுலோ வ்யநுநாத$_3$யந் ||

**மேலும், அந்த பயங்கர ஒலி ஆகாயத்தையும் பூமியையும் எதிரொலிக்கச் செய்து, திருதராஷ்டிரருடைய (அதாவது, உங்கள்) அணியினரின் இதயங்களைப் பிளக்கச் செய்தது.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–19*



தே$_2$வராஜ த$_3$யாபாத்ரம்
ஸ்ரீகாஞ்சீபூர்ணமுத்தமம்
ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தே$_3$ஹம்
ஸஜ்ஜநாச்ரயம்

**ஸ்ரீவரத$_3$ராஜனின் கருணைக்கு இருப்பிடமாய், மிகச் சிறந்தவராய், ராமாநுஜமுனிக்கும் மதிக்கத்தக்கவராய், நல்லோர்கள் சென்று சேருமிடமான திருக்கச்சி நம்பியை வணங்குகிறேன்**

*- ஆசார்ய வைபவ மஞ்ஜரி*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## “ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை”

*“மானிட சேவையே மாதவன் சேவை”* எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி. தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து “ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை” யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### திட்டத்தின் நோக்கங்கள் :

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

### ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்வித தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் – “செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி” எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை “பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி – 517 507” எனும் முகவரிக்கு அனுப்பவும்.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி

சமய மாத இதழ்

பிப்ரவரி 2021

மலர் 51

இதழ் 09

## உள்ளுறை

பக்கம்

இரத சப்தமி 7
- திருமதி. மைதிலி சம்பத், செகந்திராபாத்.

நீருக்குள் நிறைந்துள்ள நெருப்புத் துளிகள் 11
- இதிஹாசமயம் வீ.சீதாராமன், சென்னை.

அக்னி பகவான் இழந்த ஒளியைத் திரும்ப அளித்த சிக்க திருப்பதி ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் 14
- திருமதி ஜி.விஜயலக்ஷ்மி, கல்லிடைகுறிச்சி.

முக்குறும்பறுத்த கூரேசர் 17
- திரு. ஜெ.சுவாமிநாதன், சென்னை.

மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்... 20
- ஸ்ரீ. உ.வே.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம்.

திருமழிசை ஆழ்வார் போற்றும் திருவேங்கடம் 24
- திரு. ஸ்ரீநிவாசன், பரமகுடி.

விற்றுவக்கோட்டு அம்மானே 31
- திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி.

108 திவ்வியதேச வைபவம் – திருக்குறுங்குடி 35
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் : பெற்றோர்களுக்கும் பெண்ணுக்கும் ஆறுதல் சொல்லும் மந்திரங்கள் 39
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் 42
- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன் 45
- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.

ஆயுர்வேதம்–முத்தக்காசு -திருமதி. வி.உஷா, திருப்பதி. 49

நீதிக்கதைகள் : ஓர் ஏழையின் கதை 51
- திருமதி பிரேமா வரதன், சென்னை.

சித்திரக்கதை : உத்தம புத்திரன் 52
- திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.

புதிர் : வினா–விடை 54
- திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.

சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
பேராசிரியர் K. ராஜகோபாலன், பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : சூரியப்பிரபை வாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி (உத்ஸவ மூர்த்தி), திருமலை.

பின்னட்டை : ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி (உத்ஸவ மூர்த்தி), தேவுனி கடபா.

உங்களுடன்...

# கண் கண்ட தெய்வம்



இந்தியப் பண்பாட்டில் சாம்ப்ரதாயங்களுக்கும் அனுட்டானங்களுக்கும் சிறப்பிடம் உண்டு. இதில் ஒரு பகுதியாக மாக மாதத்தில் (மாசி) வரும் சுக்ல ஸப்தமியை "ரத ஸப்தமி" என்று கூறுவர். சூரிய பகவானை உபாசிப்பவர்களுக்கு இந்நாள் பரம பவித்திரமானது. தினம் பண்ணும் சூரிய பூஜையைக் காட்டிலும் ரத ஸப்தமி அன்று நடத்தும் பூஜைக்கு பலன் சற்று அதிகம் உண்டு. இந்நந்நாளில் பிரம்ஹ மூகூர்த்தத்தில் குளித்து ஜபம், தானம், அர்க்ய ப்ரதானம் முதலானவற்றை பண்ணினால் சிறப்பு பலன் கிட்டும். ஆயுள், ஆரோக்கியத்தோடு, செல்வ வளங்களும் சித்திக்கும்.

இந்நந்நாளில் சூரியன் உதிப்பதற்கு முன்னரே எழுந்து குளிக்க வேண்டும். அதுவும் ஏழு எருக்கம் இலையை தலை, தோள்களில், முழங்கால்களில், பாதங்களில் வைத்து குளிப்பது நன்மை பயக்கும். மேலும், இவ்வாறு குளிக்கும் தருணத்தில் **''ஸப்த ஸப்த மஹா ஸப்த ஸப்த த்வீபா வசுந்தரா, ஸப்தார்கபர்ணமாதாய ஸப்தமி ரதஸப்தமி''** என்னும் சுலோகத்தை உச்சரிக்க வேண்டும்.

அன்றைய தினம் சூரிய பகவானுக்கு எதிரே பசும்பாலில் தயார் செய்யப்பட்ட க்ஷீரான்னத்தை (பால் சோறு) நைவேத்தியமாக சமர்ப்பிப்பர். சூரியன் க்ஷீரான்னப் பிரியன். இதனை சமைப்பதற்குக் கூட பசுஞ்சாணத்தால் உருவாக்கிய வறட்டையை பயன்படுத்துவர். குறிப்பாக மார்கழி மாதத்தில் வைத்த கொப்பிகளால் ஆன வறட்டைகளை சில பேர் ரதஸப்தமியன்று பயன்படுத்துவர். சூரிய சக்திக்கும், பசும்பாலுக்கும், பசுஞ்சாணத்திற்கும் தொடர்பு இருப்பதாக அறிவியலார் கண்டறிந்துள்ளனர்.

இவ்வாறு தயார் செய்யப்பட்ட க்ஷீரான்னத்தை அவரை இலைகளில் பரிமாறி சூரிய பகவானுக்கு நிவேதிப்பர். அவரைக் காய்களால் அழகான ரதத்தை அமைத்து, அதில் கந்தத்தை வைத்து, சூரியனை ஆவாஹணம் செய்து, சோடஷ உபசாரங்களால் பூஜிப்பர்.

சூரிய உபாசனை சக்தி வாய்ந்தது என்று புராணங்கள் பகர்கின்றன. ஸ்ரீராமர் "ஆதித்ய ஹ்ருதயம்" பாராயணம் செய்த பின்னர் இராவணனோடு யுத்தம் பண்ணினார். சூரியன் வேதவித்தகன். அனுமனுக்கு சகல வித்தைகளையும் கற்பித்த குரு. ஆகவே நம் ரிஷிகளும் மகான்களும் சூரிய உபாசனைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். அதோடு சூரிய பகவானை கண் கண்ட தெய்வமாகக் கருதுகின்றனர்.

"ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத்" என்பர் பெரியோர். அதாவது சூரியன் ஆரோக்யம் அளிப்பவர் என்பது பொருள். சூரிய வழிபாடு ஆரோக்கியத்திற்கு எவ்வளவோ மேலானது. எனவே இந்தியத் திருநாட்டில் படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை அதிகாலையில் எழுந்து நீராடி விட்டு சூரிய நமஸ்காரம் பண்ணுவர். சில பேர் நித்தியம் சூரிய நமஸ்காரத்தால் சுகாதாரத்தை காக்கின்றனர். சூரியன் அன்றி இவ்வுலகே இல்லை.

இந்த ரத ஸப்தமி கூறும் உண்மைப் பொருளையும் நாம் உணர வேண்டும். நம் உடலே ஒரு ரதம். மனதையும் ரதத்தோடு ஒப்பிடுவர். இந்திரியங்கள் என்னும் குதிரைகள் வழி தவறி கட்டுப்பாட்டை இழந்தால் ஆபத்து நேரும். புத்தியின் உதவியால் இந்திரியங்களை கட்டுப்பாட்டில் வைத்து சன்மார்க வழியில் பயணித்தால் நற்கதி சங்கவிக்கும்.

கலியுக வைகுண்டமான திருமலை திவ்விய தேசத்திலும், "ரதஸப்தமி" திருவிழா கோலாகலமாக கொண்டாடப் படுகின்றது. இந்நந்நாளில் சூரிய உதயத்திலிருந்து சந்திர உதயம் வரை திருமலையப்ப ஸ்வாமி ஏழு வாகனங்களில் நான்கு மாட வீதிகளில் திருவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். எம்பெருமானுக்கு பிரம்மோத்ஸ வத்தில் பத்து நாட்கள் வாகன சேவைகள் நடைபெற்றால், இந்த ரத ஸப்தமி அன்று ஒரே நாளில் ஏழு வாகன சேவைகள் நடைபெறுவதால் "ஒரு நாள் பிரம்மோத்ஸவம்" என்று இது போற்றப்படுகின்றது.

வாருங்கள்! ஏழு வாகன சேவைகளை தரிசியுங்கள்!!

# இரதசப்தமி



**திருமதி மைதிலி சம்பத்,**
**செகந்திராபாத், 81256 16876**

உலகம் தோன்றி, அதில் மக்கள் தோன்றிய நாள் முதற் கொண்டு கண்ணெதிரே தோன்றும் சூரியனைக் கடவுளாகவே வழிபடுகின்றனர். பக்தர்களிடையே அவர் ஸ்ரீசூரிய நாராயணர். ஸ்ரீமஹா விஷ்ணுவின் பிரதிநிதியாக அவர் சகல ஜீவராசிகளும் வாழ்வதற்கு ஆதாரமாய் இருப்பவர். ஆதி சங்கரர் காலத்திலேயே ஷண்மதங்களில் சௌரம் என்று சூரியனை முன்னிட்ட பிரிவும் உண்டு.

இரதசப்தமி என்பது சூரியனை முன்னிட்டு பாரதம் முழுவதிலும் கொண்டாடப்படும் திருநாள். அதை சூரிய ஜெயந்தி என்று அழைப்பர். கஸ்யப முனிவருக்கும் அவர் மனைவி அதிதிக்கும் பிறந்தவர் சூரியன்.

ஒவ்வொரு மாதமும் இரண்டிரண்டு சப்தமிகள் வருகின்றன. மாசி மாதம் அமாவாசைக்குப் பிறகு சுக்ல பட்சத்தில் வரும் இந்த சப்தமிதான் இரத சப்தமி. இது வருடத்திலேயே மிக முக்கியமான சப்தமி. இந்த நாளன்று தான் சூரியன் பூமிக் கோளத்தின் வட பகுதியை நோக்கி தென்கிழக்கிலிருந்து வட கிழக்காகத் திரும்புகிறார். வஸந்த பஞ்சமிக்கு இரு நாட்கள் கழித்து வருகின்ற இது வஸந்தத்தின் ஆரம்பம். அதற்குப் பிறகு சில நாட்கள் சென்றபின் வெப்பமும் அதிகரிக்கத் துவங்கும்.

இரதசப்தமிக்கு சூரிய ஜெயந்தி, மகாசப்தமி, ஜெய சப்தமி, விதான் சப்தமி, ஆரோக்ய சப்தமி, மந்தர் சப்தமி, அச்சல சப்தமி என்றெல்லாம் பெயர்கள் உண்டு. ஆயினும் இரதசப்தமி என்றே அதிகமாக வழங்கப்படுகிறது. காரணம் சூரியனின் ரதம் அந்த அளவு முக்கியமானது. அந்த விசித்திரமான ரதத்திற்கு ஒரே சக்கரம்தான். அந்த ரதத்திற்கு ஏழு குதிரைகள் பூட்டப்பட்டுள்ளன. ரத சாரதியோ இடுப்புக்குக் கீழே அவயவங்கள் இல்லாதவர். அவர் பெயர் அருணன். அந்த ரத சாரதியின் சிவந்த கிரணங்கள் வருவதைத் தான் அருணோதயம் என்று குறிப்பிடுகிறோம்.

முழு சூரியனும் தென்பட்ட பிறகு யாராலும் அதை சாதாரணக் கண் கொண்டு பார்க்க இயலாது. அந்த ஒரு சக்கரத்தின் ஆரங்கள் 12 (12 சக்கரங்கள் என்றும் சில இடங்களில் நம்புகிறார்கள்). அந்த 12 ஆரங்களும் 12 ராசிகளைக் குறிக்கின்றன. ஏழு குதிரைகள் வானவில்லின் ஏழு வண்ணங்களைக் குறிப்பதாக உள்ளது. வாரத்தின் ஏழு நாட்களைக் கூட அவை குறிக்கின்றன. அஸ்வம் என்றால் குதிரை என்பதைத்தவிர கிரணம் என்றும் ஒரு பொருள் உண்டு. சூரியன் அவருடைய ரதத்தில் சாரதியு

டனும், ஏழு குதிரைகளுடனும், ஒரு சக்கரத்துடனும் ஓய்வின்றி சுற்றி வருகிறார். சூரியனின் ரதத்திலுள்ள ஏழு குதிரைகளின் பெயர்களும் புராணங்களில் ஸ்பஷ்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

சூரியன் மற்றும் எட்டு கிரகங்களைப் பற்றியும் வேதங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சூரியனுடைய பெயர்களில் முக்கியமானவை பன்னிரண்டு அவை : மித்ர, ரவி, சூரிய, பானு, கக, பூஷன், ஹிரண்யகர்ப்ப, மரீசி, ஆதித்ய, ஸவித்ர, அர்க்க, பாஸ்கர.

நாம் உள்ளது வைவஸ்வத மன்வந்தரம். விவஸ்து என்பது சூரியனின் பெயர். அவர் புத்திரன் வைவஸ்வத மனு தன் ஆட்சியை ஆரம்பித்தது இந் நாளில்தான். நம் இதிகாசங்களான இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் சூரியனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. ராம–ராவண யுத்தத்திற்கு முன்னால் அகஸ்தியர் சூரியனின் வழித் தோன்றலான இராமனுக்கு ஆதித்ய ஹ்ருதயத்தை உபதேசித்து, சூரியனுக்கு பூஜை செய்யும்படி கூறினார். பீஷ்மர் தன் விருப்பப்படி தன் உயிரை விடுத்து மோட்ச லோகம் சென்றது இரத சப்தமியன்றுதான்.

காம்போஜ நாட்டு அரசன் யசோவர்மன் தனக்கு ஒரு வாரிசு வேண்டி பகவானைத் துதித்தான். ஆண் மகவு பிறந்து வளர்ந்தது. ஆனால், அதற்கு உடல் பிணி மிக அதிகமாகவும், கவலைக்கிடமாகவும் இருந்தது. அப்போது ஒரு முனிவர் இரத சப்தமி பூஜை செய்தால் முற்பிறவியின் வினைகள் அகலும் என்று அறிவுரை சொல்ல, அவ்வண்ணமே அரசர் செய்து, குமாரனின் பிணிகள் நீங்கி அவன் பல காலம் புகழுடன் அரசாண்டான்.

# திருக்கச்சி நம்பிகள்



**சென்னைக்கருகே பூவிருந்தவல்லி எனும் ஊரில் வைச்ய குலத்தில் கமலாபதி, கமலநாச்சியார் தம்பதியருக்கு நான்காவது குமாரராக மாசி மாதம் மிருகசீர்ஷ நட்சத்திரத்தில் அவதரித்தவர் திருக்கச்சி நம்பிகள். பெற்றோர் அளித்த தனத்தைக் கொண்டு ஓர் அழகிய நந்தவனம் அமைத்து, அங்கு மலரும் புஷ்பங்களை பறித்து, மாலைகளாகத் தொடுத்து காஞ்சீ வரதருக்கு சமர்ப்பித்து வந்தார் திருக்கச்சி நம்பிகள்.**

**இவர் எம்பெருமானுக்கு தொண்டு செய்வதே மிகவும் ஏற்றமுடையது என்று நிச்சய புத்தியுடன் பகவானுக்கு திருவாலவட்டக் கைங்கர்யம் புரிய வேண்டும் என்று ஆவல் கொண்டு, நேராக திருவரங்கம் சென்று பெருமாள் ரங்கநாதனிடம் தன் எண்ணத்தை எடுத்துரைத்து அனுமதி தானம் கேட்க, ரங்கநாதன்,** *“............. காவிரி நடுவு பாட்டு பொங்கு நீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம்”* **என்று தொண்டரடிப்பொடி ஆழ்வார் பாடியுள்ளதை நீர் அறியீரோ? குளிர்ந்த நீரால் சூழப்பட்டு இருக்கும் எனக்கு ஆலவட்டக் கைங்கர்யம் தேவை இல்லை என்று திருவாய்மலர்ந்தருளினார்.**

**ஸ்ரீரங்கத்திலிருந்து திருமலை வேங்கடவனுக்கு ஆலவட்டக் கைங்கர்யம் செய்வோம் என்று ஆவலுடன் அங்குச் செல்ல, “இது குளிரருவி வேங்கடம்” ஆயிற்றே! அதனால் நீர் உத்தர வேதிக்குள் உதித்தவனுக்கு இக்கைங்கர்யம் செய்வது பொருந்தும் என்று ஸ்ரீநிவாஸன் அருளினார்.**

**பிரமன் செய்த யாகத் தீயிலிருந்து ஆவிர்பவித்த காஞ்சீ பேரருளாளனின் நியமனம் பெற்று, அனுதினமும் இரவு அர்ச்சகர் நடைசாத்திவிட்டுப் போன பிறகு பகவானது திருமேனி குளிர ஆலவட்டம் சாதித்து வந்தார்.**


**– திருமதி வஸந்தா ஸ்ரீநிவாசன், சென்னை.**



**இரத சப்தமி பூஜை :**



இதற்கு முதல் நாள் வீட்டை சுத்தம் செய்து, மாவிலை கொண்டு வந்து வீட்டின் முக்கிய இடங்களில் வைத்து விடுவர். அதிகாலை எழுந்து வாசலில் தேர்போல் கோலங்களை வரைவர். பிறகு ஏழு எருக்கம் இலைகளைக் கொண்டு வந்து கல்யாணமான பெண் கள் அவ்விலைகளின் மேல் மஞ்சள், சிறிது குங்குமா க்ஷதை ஆகிய வற்றை வைத்து, தலை மேல் ஒன்று, இரண்டு தோள்களின் மேல் ஒவ்வொன்று, இரண்டு முழங்கால் களின் மேல் ஒவ்வொன்று, இரண்டு பாதங்களின் மேல் ஒவ்வொன்று வைத்து ஸ்நானம் செய்வர். ஆடவ ரும் அது போலவே மஞ்சள் தவிர இலையும் அரிசியும் வைத்து தீர்த்தமாடுவர். சிலர் இலந்தைப் பழங்களையும் சேர்த்துக் கொள்வர். எருக்க இலை சரும வியாதிகளைப் போக்கும். இலந்தைப்பழம் திருஷ்டி தோஷம் நீக்கும். அவரை இலை ஔஷத குணங்கள் நிறைந்தது. ஸ்நானம் செய்ய தலை மேல் விளக்கு வைத்துக் கொண்டு போவதும் வழக்கத்தில் உள்ளது. சூரியனுக்கு அர்க்யம் விட்டு, 12 நாமங்களையும் கூறி ஸ்நானம் செய்வர். அதன் பிறகு பசுஞ் சாணியின் வறட்டியில் தீமூட்டி அதில் பசும் பாலில் பரமான்னம் எனும் சர்க்கரைப் பொங்கல் செய்து அதையும் ஏழு அவரை இலைகளின் மேல் சிறிது சிறிதாக வைத்து நிவேதனம் செய்வார்கள். காய்ந்த குச்சிகளால் அவரைக்காயை ரதம் போல் செய்து வைப்பது வழக்கம். இந்தச் சர்க்கரை பொங்கலை துளசி மாடம் முன்பாக செய்வது விசேஷம். வடையும் செய்து நிவேதிப்பதுண்டு.











சூரியனுக்கு சிவப்பு வஸ்திரம், சிவப்புப்பூ, சிவப்பு அட்சதை ஆகியவை சமர்ப்பித்து பூஜை செய்வார்கள். பிராமணர்களுக்கு எள்ளு உட்பட, முடிந்த பணம், வெள்ளி, தங்கம், வஸ்திரம் தானம் செய்வர்கள்.



*"ஓம் ஹ்ரீம் ஸூர்யாய நம:"* என்பது இப்பூஜையின் மந்திரம். தவிர ஆதித்ய ஹ்ருதயமும், சூரிய சத கம், சூர்ய அஷ்டகம், சூரியனுக்குப் பிடித்தமான காயத்ரி ஜபம் ஆகியவற்றையும் ஜபிப்பார்கள். சூரிய பூஜையின் பலனாக ஏழு ஜென்ம வினைகளும் அகலும் என்று பவிஷ்யோத்ர புராணத்தில் கூறப் பட்டுள்ளது.

சூரியன் ஆரோக்கியம், நீண்ட ஆயுள், செல்வம் ஆகியவற்றை அருள்வார். விடியற்காலை பூஜை உடலுக்கும், மனதிற்கும் சக்தி கொடுக்கக் கூடியது. புனிதமானது. இது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப் பட்டதும் ஆகும். அதனால்தான் மக்கள் வீடுகளிலும், பாரதம் முழுவதும் உள்ள எண்ணற்ற கோயில்களிலும் சூரியனை இரத சப்தமியன்று பூஜிக்கின்றனர்.

இரதசப்தமியன்று திருமலையிலும் காலை முதல் மாலை வரை திருமலையப்ப ஸ்வாமிக்கு வாகன சேவைகள் நடைபெறும். இதனை "ஒருநாள் பிரம்மோத்ஸவம்" என்றும் அழைக்கப்படுகிறது. திருப்பதியில் திருவேங்கடபுரத்தைச் சேர்ந்த காரணிகம் அப்பளய்யர் என்பவர் ஒரு கிராமத்தை இரத சப்தமி உத்ஸவத்திற்காக அளித்ததை செப்புத் தகட்டில் பண்டாரத்தில் இன்றும் காணக் கிடைக்கிறது. வருடந்தோறும் ஐந்து நாட்கள் இந்த உத்ஸவத்தை பல்லவோத்ஸவம் எனும் பெயரில் கொண்டாட வேண்டும் என்பது அவர் வேண்டுகோள்.

இரத சப்தமி அன்று திருமலையப்ப ஸ்வாமி ஸ்ரீதேவி பூதேவியுடனும், தனித்தும் ஏழு வாகனங்களில் எழுந்தருளுகிறார். இங்கு இந்த வைபவத்தைக் காண ஆயிரம் கண்கள் போதாது. அவருடைய வாகனங்களின் அழகை, அதில் அவர் அமரும் கோலத்தின் அழகை, எண்ணற்ற ஆபரணங்களின் அழகை, வாசனைப் பூக்களின் அழகை வருணிக்கவும் வார்த்தைகள் போதாது. இவற்றை அநுபவிக்க லக்ஷக் கணக்கில் மக்கள் கூடுவர்.

இரதசப்தமியன்று சூரியப்பிரபை வாகனத்தில் ஆரம்பித்து , சிறிய சேஷ வாகனம், கருட வாகனம், அனுமத் வாகனம், (சக்ரஸ்நானம்) கல்ப விருட்சம், சர்வ பூபால வாகனம், சந்திரப்பிரபை வாகனங்களில் ஆகியவற்றில் திருமலையப்ப ஸ்வாமி எழுந்தருள்வார்.

திருப்பதியில் உள்ள கோவிந்தராஜ ஸ்வாமி கோயிலிலும் இது உப பிரம்மோத்ஸவம் என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது. அங்கு விடியற்காலையிலேயே கபில தீர்த்தம் ஆழ்வார் குளத்தில் சக்ர ஸ்நானம் நடைபெறும். மற்றும் கோதண்டராம ஸ்வாமி கோயில், நாகுலாபுரம் வேத நாராயண ஸ்வாமி கோயில், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் கோயில், நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் ஆகிய அனைத்து கோயில்களிலும் இரத சப்தமி விழா கோலாகலமாக நடைபெறும்.

ஸ்ரீகாகுளம் அருகேயுள்ள அரசவல்லிக் கோயிலை தேவேந்திரன் கட்டியதாக புராணம் கூறுகிறது. இரதசப்தமி அன்று விடியலில் அங்குள்ள ஏழு அடி உயரமுள்ள சூரிய விக்ரகத்தின் பாதங்களை சூரிய கிரணங்கள் வருடுகின்றன.

கஜுராஹோவில் 11 வது நூற்றாண்டில் சூரியன் கோயில் கட்டப்பட்டதற்கான ஆதாரம் உள்ளது. ஒரிஸா கோனார்க் சூரி யன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. பீஹார் டியோ(தேவ்) மந்திர் 8ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட சூரியன் கோயில். இங்கும் இரத சப்தமியன்று கூட்டம் அலைமோதும். குஜராத் சோலங்கி வம்சத்து அரசன் 11–ம் நூற்றாண்டில் கட்டிய மோதெரா சூரியன் கோயிலும் பிரசித்தி வாய்ந்தது.

தென் இந்தியாவில் மேல்கோட்டை ஸ்ரீரங்கப் பட்டிணம் க்ஷேத்திரங்களிலும் பெருமாள் வீதி புறப்பாடு கண்டருளுகிறார். ஸ்ரீரங்கத்தில் இரதசப்தமி அன்று இரத உத்ஸவம் உண்டு. நாமும் இரதசப்தமியன்று சூரியனையும், நாராயணனையும் பூஜித்து நல்வாழ்வு பெறுவோமாக!

**பண்பாட்டு ஆடை**

- ⇨ திருமலையானின் வி.ஜ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ⇨ ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- ⇨ பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/ பஞ்சாபி டிரஸ்–சுடிதார்.



# நீருக்குள் நிறைந்துள்ள நெருப்புத் துளிகள்

இதிஹாசமயம் வீ. சீதாராமன்,
சென்னை, 98945 26302.

மஹாபாரத யுத்தம் நிகழ்ந்த காலம். பீஷ்ம பிதாமகர் அர்ஜுனனின் அம்புகளால் உடல் முழுதும் துளைக்கப்பட்டு கீழே சாய்ந்து விடுகிறார். துளைக் கப்பட்ட அம்புகள் பல அவரது உடலை தாங்கிய வண்ணம் பூமியில் விழாமல் அம்புப் படுக்கை யிலேயே சாய்ந்த வண்ணம் இருக்கிறார். பீஷ்ம பிதாமகரின் இறுதி நாட்கள். பாண்டவர்கள் கௌர வர்கள் அஸ்தினாபுரத்தின் முக்யஸ்தர்கள், கபட நாடக சூத்ரதாரியான பகவான் ஸ்ரீகிருஷ்ணரும் பீஷ்மரின் அம்புப் படுக்கை அருகில் அமைதியாக காணப்பட்டார். பீஷ்மருக்கு தன்னுடைய தரிசனம் கிடைக்கும் வகையில் அவருடைய காலடிப்பக்கம் நின்று காட்சி தருகிறார்.

ஸ்ரீகிருஷ்ணர் யுதிஷ்டிரரை நோக்கி, பிதாமக ரிடம் அனைத்து தர்ம சாஸ்திரங்களையும், ராஜ தந்திரங்களையும், மன்னனின் கடமை என்ன, போன்ற தத்துவங்களையும் உபதேசமாகப் பெற்று, உயர்ந்த ஞானத்தையும் பிதாமகரிடம் இருந்து கிரஹித்துக் கொள்ளும்படி ஆணையிடுகிறார். அவ்வாறே யுதிஷ்டிரன் வேண்டுகோளுக்கு இணங்க, சகல தர்ம சாஸ்திர ஞானங்களையும் பிதாமகர் உபதேசிக்கிறார்.

தனக்கு ஸ்ரீகிருஷ்ணரின் தரிசனமும் கிடைத்த க்ஷணத்தில், சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனே பகவான் ஸ்ரீகிருஷ்ணராக பூமியில் அவதரித்திருந்த உண் மையை பீஷ்மர் உணர்ந்திருந்தார். பிரபஞ்சத்தில் சிருஷ்டிக்கப்பட்ட சகல அம்சங்களும் நிறைந்த, விஸ்வரூப தோற்றம் அவரது மனக்கண்ணில் பிரகாசமாக உருக்கொண்டது. பக்திப் பரவசத்தின் உச்ச கட்டத்தை அடைந்தார் பிதாமகர். பகவானின் தோற்றத்தில் ஒடுங்கி இருந்த அனைத்து வடிவங் களையும் ஒவ்வொன்றாக மனதில் அனுபவித்தார். அற்புதமாக அவரது மனதில் பரிமளித்து நின்ற ஒவ் வொரு ஸ்வரூபமும் பல விசேஷமான நாமங்களாக அவருடைய வாக்கில் உதித்தன. கட்டுக்கடங்காத பக்திப் பரவசத்தோடு தனது மனதில் தோன்றிய உத்தமமான நாமங்களை அழகிய ரம்மியமான உச்சாடனங்களுடன் கவிதை பிரவாகமாக உருக்க மாக வெளியிட்டார். அவ்வாறு வெளியிட்ட நாமங்க ளின் தொகுப்பே நாம் இன்று வரை அன்றாடம் பக்தி யுடன் பாராயணம் செய்து அனுபவித்து வரும் “விஷ்ணு சஹஸ்ர நாமம்”.

விஷ்ணு சஹஸ்ர நாம ஸ்தோத்திரத்தில் ஸ்ரீமந் நாராயணனின் தோற்றத்தையும் அவருடைய அவதாரங்களின் பல்வேறு அம்சங்களையும் ரூப, நாம, குண விசேஷங்களையும் அருட்கடாக்ஷத்தின் வெளிப்பாட்டினையும் மிக நுணுக்கமாக வர்ணித்து போற்றிப்புகழ்ந்து, ஓர் அற்புதமான ஸ்துதியாக பீஷ்மர் செய்துள்ளார்.

ஆனால், துரியோதனன் முதலான கௌரவர் கள், விஷ்ணு சஹஸ்ர நாமத்தை ஸ்துதியாக பீஷ்மர் துவங்கியதும், அந்த இடத்தை விட்டு அகன்று

விட்டனர். யுதிஷ்டிரரும் தனது நான்கு சகோதரர்களும் இன்னும் நலனிலும் தர்மத்திலும் நாட்டம் கொண்ட பலரும் சூழ நின்று பிதாமகர் கூறிய மந்திர சப்தங்களைக் கேட்டு மனம் ஸ்தம்பித்து நின்றனர்.

விஷ்ணு சஹஸ்ர நாமம் நிறை வுற்றது. ஸ்ரீகிருஷ்ணர், பீஷ்மருக்கு தனது விஸ்வரூப தரிசனத்தோடு காட்சி அளித்தார். கூடி இருந்த அனைவரிலும், யுதிஷ்டிரனின் கடைசி சகோதரனனான சகாதேவன், அதி அற்புதமான சாஸ்திர, ஜ்யோதிஷ நூல்களை கற்றுணர்ந்த மஹாஞானி. அவன் கற்று இருந்த அனைத்து சாஸ்திர மந்திர தந்திர பிரயோகங்களை மிஞ்சி, விஷ்ணு சஹஸ்ர நாமம் எனப்பட்ட மந்திரங்க ளால் வெகுவாக கவரப்பட்டு அனைத்து சூழ்நிலைகளையும் மொத்தமாக மறந் தான். தீவிரமான பக்திப் பரவசத்தில், ஸ்ரீமந்நாராயணனின் மீது கொண்ட பக்தி யும் ஈடுபாடும் மட்டுமே அவனுடைய மனதில் நிலை கொண்டன. விஷ்ணு சஹஸ்ர நாமத்தின் வரிகள் அவன் மனதில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருந்தன.

ஆனால், பீஷ்ம பிதாமகரால் செய்யப்பட்ட ஸ்துதியின் அனைத்து பிரயோகங்களும் அவனது நினைவுக்கு வரவில்லை. ஸ்ரீகிருஷ்ணரிடம் தனது குறையை வெளியிட்டான் சகாதேவன். பிதாமகர் இணையற்ற மந்திர பிரயோ கங்களாக உபதேசம் செய்த போது ஏடுகளில் பதிவு செய்ய இயலாத நிலை யில், மனம் லயித்து இருந்த நிலையினை விரிவாக எடுத்துரைத்தான். மீண்டும் அந்த மந்திரங்களை முறையாக பெற வழிகாட்டுமாறு பணிந்து நின்றான்.

ஆபத்பாந்தவன் அனாதை ரக்ஷகன் ஸ்ரீகிருஷ்ணன் விட்டு விடுவாரா என்ன? ஒரு அற்புதமான யோசனையை அருளினார்.



“சகாதேவா! பீஷ்மர் முக்தி அடைந்த பின், அவர் உடலுக்கு மரியாதை செய்து முடித்த பின், அவர் கழுத்தில் அணிந்துள்ள ஸ்படிக மணிமாலையை எடுத்து நீ அணிந்து கொள். அந்த மணிகளின் சக்தியால் விஷ்ணு சஹஸ்ரநாமம் முழுவதுமாக உன் நினைவுக்கு வரும்” என்று அருளினார்.

சகாதேவன் ஆச்சரியம் அடைந்தான். “சாதாரண ஸ்படிக மணிகளுக்கு மந்திர சப்தங்களை ஈர்த்து, மீண்டும் அவற்றை வெளிப்படுத்தும் சக்தி உண்டா? என்று கேட்டான். அப்போது பீஷ்மருக்கு அந்த ஸ்படிக மணிகள் எவ்வாறு கிடைத்தன என்ற வரலாற்றைக் கூறி, அதன் பெருமையை விளக்கினார்.

கங்கா தேவிக்கும் சந்தனு மஹாராஜனுக்கும் பிறந்தவர் பீஷ்மர். சந்தனு மஹாராஜன் ஒரு மீனவப் பெண்ணை மணக்க விரும்பினார். சந்தனு மகாராஜன் அந்த மீனவனின் மகளை மணக்க மீனவன் ஒரு கடுமையான நிபந்தனை விதித்தான். அந்த நிபந்தனையை நிறைவேற்றும் வண்ணம் தான் ஒருபோதும் விவாஹம் செய்து கொள்ள மாட்டேன் என்றும், புத்ரோத்பத்தி செய்யவே மாட்டேன் என்றும் ஒரு கடுமையான சபதம் செய்தான். அந்த சபதம் செய்த க்ஷணமே, விண்ணில் உள்ள தேவர்கள் கூட, தேவவிரதன் என்ற அரச குமாரனை “பீஷ்ம ... பீஷ்ம..” என்று அழைத்தனர். அந்த நாமத்திற்கு கடுமையான சபதத்தினை செய்த பெருமைக்குடையவன் என்று பொருள்.

சபதத்தை ஏற்ற பீஷ்மரின் மனம் சற்றுக் கவலையுற்றது. வாழ்நாள் முழுவதும் சபதத்தை நிறைவேற்றுவதற்குத் தேவை யான அபார மனோபலமும் வைராக்கியமும் வேண்டும் என்ப தற்காக தன் தாய் கங்கா தேவியைப் பிரார்த்தித்தார். கங்காதேவி அவர் முன் தோன்றினாள். கங்கை நீரை எடுத்தாள். கங்கா தேவியின் கைகளில் கங்காதீர்த்தம். மேல் வானத்தில் இருந்து சூரிய பகவானின் தேஜஸ் மிகுந்த கிரணங்கள். அவ்வகையாக பிரகாசித்த கிரணங்கள் (ஒளிக் கதிர்கள்) அவள் கையிலிருந்த

நீர்த்துளிகளில் விழுந்தது. நீர்த்துளிகள் வைரம் போல் பிரகாசமாக ஜ்வலித்தனவாம். தன் கையிலுள்ள கங்கா தீர்த்தத்தை பெற்றுக் கொள்ளும்படி மகனிடம் ஆணையிடுகிறாள் கங்கா தேவி. பீஷ்மர் தன் இரு கைகளையும் குவித்து, தாயின் முன்பு நீட்டினார். கங்காதேவியின் கரங்களிலிருந்து கங்கை நீர்த்துளிகள் ஸ்படிக மணிகளாக உருமாற்றம் பெற்று பீஷ்மரின் கையில் விழுந்தன.

மகனே! இவை ஸ்படிக மணிகள். “நீருக்குள் நிறைந்துள்ள நெருப்புத் துளிகள்” இவை. பிரார்த்தனை செய்வதற்கும், வைராக்கியத்துடன் வாழ்வதற்கும், மந்திர சக்தியினை தக்க வைத்து மந்திர சாதகங்கள் புரிவதற்கும், மந்திர பிரயோகம் செய்யவும், இவை உனக்குப் பெரிதும் உதவும். இந்த மணிகளை மாலையாக எப்போதும் அணிந்திரு. இந்த ஸ்படிக மணிகளின் சக்தி மிகவும் அற்புதமானது. விரதத்திலிருந்து பங்கம் ஆகா வண்ணம் உறுதியான மனவலிமையையும் வைராக்கியத்தையும் தரும் அற்புத சக்தி கொண்டது என்று ஆசிகள் கூறி மறைந்தாள் கங்காதேவி. மகிமை பொருந்திய இந்த வரலாற்றைக் கேட்டதும், பீஷ்மரின் கழுத்தில் இருந்த ஸ்படிக மணி மாலையின் மகிமை, சகாதேவனுக்கு தெளிவாகப் புரிந்தது. பீஷ்மரின் பூதவுடல் ஸம்ஸ்காரம் ஆனபின், ஸ்ரீகிருஷ்ணர் மேலும் உபதேசித்த வண்ணம், பீஷ்மரின் ஸ்படிக மணி மாலையை பக்தியோடு எடுத்து அணிந்து கொண்ட சகாதேவன், ஸ்ரீமந்நாராயணனைத் தியானித்து பீஷ்மர் இயற்றிய விஷ்ணு சஹஸ்ர நாம மந்திரங்கள் அனைத்தையும் மீண்டும் ஸ்படிக மணிகளில் ஐக்கியம் ஆகி இருந்த ஒலி அலைகளை மீட்டி, உருவாக்கி, ஏடுகளாக்கி முழுதான “விஷ்ணு சஹஸ்ர நாமம்” என்ற வடிவத்தில் அற்புதமான பொக்கிஷமாக உலகுக்கு அளித்தான்.



தெய்வீக மனிதர்களும் சித்தர்களும், மகான்களும், மந்திர பாராயணம் செய்பவர்களும் உயர்ந்த ஸ்படிக மணிகளை மாலையாக அணிகிறார்கள். உயர்ந்த ஸ்படிக மணிகளை ஒன்றோடொன்று உரசினால் அவற்றிலிருந்து பிரகாசமான தீப்பொறி போன்ற ஒளி தோன்றும்.ஸ்படிக மணிகளை உருட்டி முறையாக ஜபம் செய்பவர்களால் ஜபம் முடிந்த பின்னும் மணிகளில் காணும் மாற்றங்களை ஒளிச் சிதறல்களை நன்றாக உணர இயலும்.

## நல்ல பழக்கவழக்கங்கள்

- காலையில் கண் விழித்தவுடன் இரு கைகளையும் தேய்த்து விட்டு, பிரித்து சேர்த்து வைத்தபின், இதைச் சொல்ல வேண்டும். ஏழு முறை ஹரி ஹரி என்று சொல்லிவிட்டு துயில் எழலாம்.

  கராக்ரே வசதே லக்ஷ்மீ: கரமத்யே சரஸ்வதி: கரமூலே து கோவிந்தா: (அல்லது கௌரீ)

  என்று சொல்லி விட்டு கைகூப்பி விட்டு எழுந்திருக்க வேண்டும்.

- வெளியே புறப்படும்போது அல்லது வாகனத்தை ஓட்டுவதற்கு முன்னும் “கேசவா” என்று சொன்னால் விபத்து ஏற்படாமல் பத்திரமாக வீட்டிற்கு வந்து சேரலாம்.



- சாப்பிடும்போது கை கூப்பி “கோவிந்தா” என்று சொல்லி விட்டு சாப்பிட ஆரம்பிக்க வேண்டும்.

- இரவில் தூங்கப்போவதற்கு முன்பு “மாதவா” என்று (மாதவன்) கூறிவிட்டு உறங்கச் செல்ல வேண்டும்.





தொகுப்பு : இந்திரா ஆராவமுதன், ஸ்ரீரங்கம்

# அக்னி பகவான் இழந்த ஒளியைத் திரும்ப அளித்த சிக்க திருப்பதி ஸ்ரீவேங்கடேசப் பெருமாள்



**திருமதி ஜி. விஜயலக்ஷ்மி,**
**கல்லிடைகுறிச்சி, 98425 39275**

திருப்பதி என்றாலே அது திருமலையில் திருவேங்கடவன் எழுந்தருளியுள்ள திருப்பதியைத் தான் குறிக்கும். கலியுகத்தில் கண்கண்ட தெய்வ மாகத் திகழும் இந்த ஆலயத்திற்கு அன்றாடம் லட்சக் கணக்கான பக்தர்கள் வருகை தருகிறார்கள். எனவே இது “பெத்த திருப்பதி”யாக அதாவது “பெரிய திருப்பதி”யாக அனைவராலும் போற்றப்படுகிறது. பூலோக வைகுண்டம் எனப்படும் திருமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாசரை சேவிக்க ஏழேழ் ஜன்ம பாவங்கள் நம்மை விட்டு அகலும் என்பது பக்தர்களின் ஆழமான நம்பிக்கை. திருவேங்கடவன் தன் பக்தர்களைக் காப்பாற்ற பக்த ரட்சகனாக ஊர் ஊராகக் கோயில் கொண்டு பக்தர்களின் நித்ய பூஜைகளை ஏற்றுக் கொண்டு அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறார்.

இவ்வாறு மகிமை பெற்ற திருவேங்கடவனின் ஒரு திவ்ய சன்னிதானமே கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டத்தில் உள்ள சிக்க (சிறிய) திருப்பதியாகும். கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரிலிருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் பெங்களூரு சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது சிக்க திருப்பதி என்ற சின்ன திருப்பதி க்ஷேத்திரமாகும். இங்கு பெருமாளை அஷ்டதிக் பாலகர்களில் ஒருவரான அக்னி பகவான் பிரதிஷ்டை செய்து வழிபட்டதாக ஐதீகம் உள்ளது.


கோலார் மாவட்டத்தில் அமைந்துள்ள சிக்க திருப்பதியில் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எழுந்தருளி யிருப்பதன் பின்னணியில் மஹாபாரதத்தில் துவாபர யுகத்தில் உள்ள ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. எண்ணற்ற யாகங்களில் ஆஹுதி அளிக்கப்பட்ட பொருட்களினால் வயிற்று வலி ஏற்பட்ட அக்னி பகவான் ஸ்ரீகிருஷ்ண பகவானையும் அர்ச்சுனனை யும் அணுகி ஆலோசனை கேட்க, அவர்கள் மூலிகைத் தாவரங்கள் நிறைந்த காண்டவ வனத்தை அக்னி தன் சுவாலைகளால் அமிழ்ந்து விழுங்குமாறு அறிவுரை கூறினார்களாம். அதற்கேற்ப அக்னி பகவான் காண்டவ வனத்தை எரித்த பொழுது, அங்கு தங்கியிருந்த அஷ்ட நாகங்களில் ஒருவனான தக்ஷகன் நெருப்பினால் மிகவும் பாதிக்கப்பட, அக்னி தன் ஒளியை இழக்க வேண்டும் என்று தக்ஷகன் சாபம் கொடுத்தான்.

அக்னி பகவான் தன் ஒளியை மீண்டும் பெறுவதற்காக சிவபெருமானைத் துதிக்க, சிவபெருமானோ ஸ்ரீமந்நாராயணனை வழிபடுமாறு



கூறினார். அப்போது அக்னி பகவான் இத்தலத்திற்கு வந்து பெருமாளை ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வரப் பெருமாளாக எழுந்தருளச் செய்து வழி பட்டு, இறைவன் அருளால் மீண்டும் தன் தேஜஜைப் பெற்றதாக மஹாபாரதம் குறிப்பிடுகிறது. சோழ மன்னன் ஜனமே ஜயன் இந்த ஆலயத்திற்கு 11வது நூற்றாண்டில் விஜயம் செய்ததாக கல் வெட்டுகள் குறிப்பிடு கின்றன.

சுமார் 120 அடி உய ரமான குன்றின் மீது அமைந்துள்ளது இந்த விசாலமான ஆலயம். ஆலய நுழைவுவாயிலை ஐந்து நிலை ராஜ கோபுரம் அலங்கரிக்கிறது. அடுத்து கொடி மரம், பலி பீடம், கருடன் சன்னதிகள் உள் ளன. கர்நாடக மாநிலத்தில் உள்ள மிகப் பழமை யான ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஆலயங்களில் இந்த சிக்க திருப்பதி ஆலயமும் ஒன்றாகக் கருதப் படுகிறது.



கருவறையில் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வரப் பெருமாள் மூன்றடி உயரத்தில் பத்ம பீடத்தில் மிகச் சிறிய மூர்த்தியாகக் காட்சி தந்தாலும் “மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது” என்ற பழமொழிக் கேற்ப இவருடைய பெருமையும் சான்னித்தியமும் அளவிடற்கரியது. திருமலையில் ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் முன் வலக் கரத்தை வைகுண்ட ஹஸ்தம் எனப்படும் வரத ஹஸ்தமாகக் கொண்டு அருள் பாலிக்கிறார். ஆனால், சிக்க திருப்பதியில் ஸ்ரீபிரசன்ன வேங்கடேசர் அபய முத்திரைக் காட்டி மக்களின் அச்சத்தைப் போக்குபவராகக் காட்சி தருகிறார். மேலும், சிக்க திருப்பதியில் ஸ்ரீதேவி பூதேவியோடு எழுந்தருளி அருள்பாலிக்கிறார். இந்த ஆலயத்தில் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு என்று தனிச் சன்னதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிக்க திருப்பதி பற்றிய இன்னொரு அரிய செய்தி இங்கு நடைபெறும் தேர்த்திருவிழா பற்றிய தாகும். ஒடிசா மாநிலம் பூரி ஸ்ரீஜகந்நாதர் ஆலயத் தில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் ரத யாத்ரை நாம் அனைவரும் அறிவோம். இதற்கென்று ஒவ் வோர் ஆண்டும் மூன்று புதிய தேர்கள் மரத்தில் உருவாக்கப்படுகின்றன. இந்த சிக்க திருப்பதியிலும் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 70 அடி உயரமான மரத்தேர் உருவாக்கப்படுவது இந்த ஆலயத்தின் இன்னொரு சிறப்பு அம்சமாகும்.

திருப்பதி சென்று முடிகாணிக்கை செலுத்த முடியாத பக்தர்கள் இந்த சிக்க திருப்பதிக்கு வந்து முடி காணிக்கை செலுத்தி தங்கள் வேண்டுதலை நிறை வேற்றிக்கொள்கின்றனர். இந்த சிக்க திருப்பதிக்கு வந்து ஸ்ரீவேங்கடேசப் பெருமாளை வழிபட் டால் திருமலை யாத்திரை செய்த பலன் கிட்டும் என்றும் பக்தர்கள் நம்புகின்றனர். இங்கு குழந்தை கிருஷ்ணன் போன்று பெருமாள் சிறிய வடிவில் எழுந்தருளியிருப்பதால் இத்தலத்திற்குக்



# திருவிளக்கின் மகிமை



பகவானுக்காக திருவிளக்கை தினமும் ஏற்றுவது என்பது நம்முடைய பண்பாடு.

இந்திரா ஆராவமுதன்,
திருவரங்கம்

திருவிளக்கில் மேற்பகுதியில் சிவன், நடு அல்லது தண்டு பகுதியில் விஷ்ணு, அடிப்பகுதியில் பிரம்மா வசிப்பதாக ஐதீகம். விளக்கில் ஊற்றப்படும் நெய் நாத தத்துவத்தை உணர்த்துகிறது. திரி பிந்து தத்துவம். சுடரில் திருமகளும், பிழம்பில் கலைமகளும் இருக்கிறாள். தீ(நெருப்பு) சக்தி தேவியின் அம்சம். பசு நெய், விளக்கெண்ணை, நல்லெண்ணை, வேப்ப எண்ணை, தேங்காய் எண்ணை ஆகிய ஐந்து கலவைகள் கலந்த கலவையால் விளக்கை ஏற்றினால் மந்திர சித்தி கிடைக்கும். வேப்ப எண்ணையுடன் இலுப்பை எண்ணையைக் கலந்து ஏற்றினால் செல்வம் விருத்தி அடையும்.

குழந்தைகளைக் கூட்டி வந்து வழிபட்டால் அவர்கள் நல்ல தேக ஆரோக்கியத்தோடு இருப்பர் என்பது நம்பிக்கை. எனவே எப்பொழுதும் இந்த ஆலயத்தில் ஏராளமான குழந்தைகள் சிறுவர், சிறுமியர்களைக் காணலாம்.

திருமலை போன்றே இங்கும் பிரம்மோத்ஸவம், இரத உத்ஸவம், புஷ்பப் பல்லக்கு, இரத சப்தமி போன்ற விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. நவராத்திரி, தனுர் மாதம் எனப்படும் மார்கழி மாத சிறப்பு பூஜைகள், வைகுண்ட ஏகாதசி போன்ற நாட்களும் விழா நாட்களாகும்.

இந்த சிக்க திருப்பதியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் பங்காரு திருப்பதி என்ற தலம் உள்ளது. இத்தலத்தில் பெருமாளை கருவறையின் சுவரில் உள்ள ஒரு ஜன்னல் வழியாகவே தரிசிக்க முடியும் என்பது இத்தலத்தின் ஒரு சிறப்பம்சமாகும்.

கோலார் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீகோடி லிங்கேஸ்வரர் ஆலயம், சிக்க திருப்பதி மற்றும் பங்காரு திருப்பதி ஆகிய தலங்களை ஒரே நாளில் தரிசிக்க முடியும். இந்த ஆலயம் காலை 6.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை தொடர்ந்து திறந்து வைக்கப்படுகிறது.



## உடுப்பி ஸ்ரீகிருஷ்ணரை பூஜித்த ஸ்ரீமத்வாசாரியர்

ஸ்ரீகிருஷ்ணரின் மனைவி ருக்மணி தாயார் தனக்கு பாலகிருஷ்ணர் வடிவத்தில் ஓர் சிலை வேண்டுமெனக் கூற, ஸ்ரீகிருஷ்ணரும் அவ்வாறே என்றார். தெய்வ சிற்பியான விஸ்வகர்மா “கையில் தயிர் கடையும் மத்தை வைத்திருக்கும் திருக்கோலத்தில் ஸ்ரீகிருஷ்ணரை” வழங்க, தேவி ருக்மணியால் பூஜிக்கப்பட்ட கிருஷ்ணர் சிலையானது, கலியுகத்தில் ஸ்ரீமத்வாசார்யர் என்ற யதிகளுக்கு உடுப்பி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் கிடைத்தது. மத்வாசாரியார் கடலருகே நின்று இருந்த பொழுது, அக்கடலில் பயணித்து வந்த கப்பல் பெரும் சீற்றத்தில் சிக்கிக்கொள்ள, மத்வாசாரியார் தனது மேலாடையைக் காண்பித்து அக்கப்பலைக் கரையேற வழி செய்ய அவருக்கு செல்வத்தை அளிப்பதாகக் கூற, மத்வாசாரியார் தனக்கு பெரும் செல்வம் தேவையில்லை என்றும் அக்கப்பலில் ஒரு பகுதியில் வைத்திருக்கும் சந்தனக் கட்டியைக் கேட்டார். அந்த கோபிசந்தன கட்டியில் ஸ்ரீகிருஷ்ணரைக் கண்டு உடுப்பியில் திருக்கோயில் கட்டி அதை பிரதிஷ்டை செய்வித்தார்.

திருமதி. எஸ். திருவேணி, நங்கநல்லூர்.

**ஆழ்வான் :**

ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாயத்தில் கூரத்தாழ்வானைப் பற்றியும், அவரது வாழ்க்கை நெறிமுறைகளைப் பற்றியும் அறியாதவர் இலர். தை மாதம் ஹஸ்த நட்சத்திரத்தில் அவதரித்தார். திருவாய்மொழியினை உரைத்திடும்போது அதில் ஆழங்கால்பட்டு கண்ணீர் மல்க பொருளை எடுத்துரைக்கையில் இவர் “ஆழ்வான்” என்ற திருநாமம் பெற்றார். ஸ்ரீவத்ஸ சிஹ்நமிச்ரர், திருமறுமார்பன், கூரேசர் முதலானபடி நமது சம்ப்ரதாய நூல்களில் இவரை அருளிச் செய்வர்.

**முக்குறும்பை அறுத்தவர் :**

கூரமா நகரின் மிகப் பெரிய நிலக்கிழார், செல்வந்தர், பொன்னும் மணியும் போன்ற போலிச் செல்வங்கள் சகடக்கால் போல் சுழன்று மனிதனை மனிதனாக வாழ வைக்காது என்ற சிந்தனையுடன் தம்முடைய செல்வம் அனைத்தையும் தானம் செய்து விட்டு இராமாநுஜரிடம் தஞ்சம் அடைந்தார். செல்வச் செருக்கு, கல்விச் செருக்கு, குலச் செருக்கு ஆகிய மூன்று செருக்கையும் அறுத்து முக்குறும்பை அறுத்தவர் எனப் பெயர் பெற்றார்.

**ஆசார்ய பக்தி :**

ஆழ்வான் எம்பெருமானாரிடம் கொண்ட ஆசார்ய பக்தி மதுரகவிகளின் ஆசார்ய பக்திக்கு ஒப்பாகும்.

இராமாநுஜர் திருக்கோட்டியூர் நம்பிகளிடம் கூரத்தாழ்வானைப் பற்றி கூறுகையில் “ஸ்வாமி! பவித்ரம் தான் கூரத்தாழ்வான் பரிவால் தமது வாழ்வை பரிபக்குவமாக்கிக் கொண்ட பவித்ர மானவன்” என்றார். இராமாநுஜர் தனது சீடனைப் பற்றி இவ்வாறு கூறுவதற்கு ஆழ்வான் பெற்ற பேறுதான் என்னே!


**ஆழ்வான் அருளிய க்ரந்தங்கள்:**

திருவரங்கம் பெரிய பிராட்டியார் பற்றிய ஸ்ரீஸ்தவம், திருமாலிருஞ்சோலை எம்பெருமான் பற்றிய சுந்தர பாஹுஸ்தவம், எம்பெருமான் விபவவதாரங்களில் செய்தருளிய அற்புத லீலைகள் பற்றி – அதிமானுஷ ஸ்தவம், பேரருளாளன் பற்றிய வரதராஜ ஸ்தவம், எம்பெருமானின் நித்ய விபூதியைப் பற்றிய வைகுண்ட ஸ்தவம்

# முக்குறும்பறுத்த கூரேசர்




– திரு. ஜெ. சுவாமிநாதன்,
சென்னை,
97907 72242.



## குமாரதாரை தீர்த்தம்

குமாரதாரை தீர்த்தமானது திருமலை ஆலயத்திலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. தேவசேனாதிபதியான குமார ஸ்வாமி, தாரகாசுரனை சம்ஹரித்ததினால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தை போக்க இந்த குமாரதாரை தீர்த்தத்தில் நீராடியதாக மார்க்கண்டேய புராணம் கூறுகின்றது. ஆண்டு தோறும் மாக மாதம் (மாசி மாதம்) மகம் நட்சத்திரம் கூடிய பௌர்ணமியன்று இத்தீர்த்தத்திற்கு "தீர்த்த முக்கோட்டி".



**தரிசனத்திற்காக கண்களையே கொடுத்தவர் :**

சோழ அரசவையில் நாராயணனே பரம்பொருள் என நிலைநாட்டியவர் ஆழ்வான். சினம் கொண்ட கொடுங்கோல் சோழ மன்னன் நாலூரான் ஆழ்வானது கண்களைக் குருடாக்க முற்பட்ட போது "எம்பெருமான் அருளால் எங்களுக்கு ஞானக் கண்கள் உண்டு, இந்த ஊனக் கண்கள் வேண்டாம்" எனக்கூறி தாமே தமது கண்களை எழுத்தாணியால் பிடுங்கிக் கொண்டார். என்னே அவர்தம் தியாகம்! தரிசனத்திற்காக தரிசனம் கொடுத்தார்.

**அவன் வேண்டா என்றேனோ ஆழ்வானைப் போலே (திருக்கோட்டியூர் பெண் பிள்ளை ரஹஸ்யம்) :**

ஒரு சமயம் திருவரங்கம் பெரிய கோயிலில் ஸ்ரீராமாநுஜர் சம்பந்தம் உள்ளவர்களை காவலர்கள் உள்ளே விட மறுத்தபோது, எம்பெருமானார் சம்பந்தமில்லாத எம்பெருமான் சேவை அடியேனுக்குத் தேவையில்லை என்று கூறி திருவரங்கனை ஆழ்வான் சேவிக்காமலேயே திரும்பி விட்டார்.

**ஆழ்வான் திருநாட்டுக்கு முதலில் எழுந்தருளுதல் :**

"பொன்னி சூழ் அரங்கமேய பூவை வண்ண..." (திருச்சந்தவிருத்தம் 119) எனும் திருமழிசைப்பிரான் பிரபந்தத்தைப் பாடி எம்பெருமானிடம் "அடியேனுக்கு உனது திருவடி வைகும் வரத்தைப் பிரசாதிக்க வேண்டும்" என்று ஆழ்வான் வேண்டினார். எம்பெருமான் திருமுகம் மலர்ந்து பரமபதம் தந்தோம் என அருளினார். இராமாநுஜர் இதனை அறிந்து "கூரேசா! நீ ஏன் முந்திக் கொண்டாய்?" என வினவ, ஆழ்வான் "அடியேன் முன்னால் பரமபதம் சென்று பின்பு வரப்போகும் ஆசார்யரான தேவரீரை எதிர் கொண்டு அழைக்க வேண்டாமா?" என்றார்.

**கூரேசர் ஓர் வைரம் :**

*"தேவு மற்றறியேன்", "திருக்குருகூர் நகர் நம்பிக்கு ஆள் உரியனாய் அடியேன் பெற்ற நன்மையே", "அன்பனாய் அடி யேன் சதிர்த்தேன்"* என்று மதுரகவிகள் ஆசார்ய பக்திக்கு வித்திட்டார். அதனை கூரத்தாழ்வான் செயல்வழிப் படுத்திக்காட்டினார்.






# நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| புத்தகத்தின் பெயர் | : | கம்பராமாயணம் (இராமாவதாரம்) |
| ஆசிரியர் | : | பள்ளத்தூர் பழ. பழனியப்பன் |
| கிடைக்குமிடம் | : | வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை – 600 017, |
| | ; | 98408 68543. |
| பாகங்கள், விலை | : | ஒன்பது பாகங்கள், ரூ.3,600/- |

இராமாயணம், இராமாவதாரம் என்னும் பெயரிலேயே கம்ப நாட்டாழ்வான் குறிப்பிடுகின்றார். *“கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்”* என்பதற்கிணங்க, கம்பரால் இயற்றப்பட்டதால் கம்பராமாயணம் ஆயிற்றாம். இப்புத்தகம் ஒன்பது பாகங்களாக – பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம் (4 பாகங்கள்) உள்ளது. ஒவ்வொரு பாகத்திலும் அணிந்துரையாகவும், ஆய்வுரையாகவும், வாழ்த்துரையாகவும், பதிப்புரையாகவும் கல்வியிற் சிறந்த முனைவர், பேராசிரியர்கள் ஒருமித்த கருத்தாகத் தந்துள்ளனர்.

இவ்வுரை பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரை என்னும் பாணியில் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் அருஞ்சொற் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. படிப்பவர்கள் பாடலின் பொருளை எளிதில் உணருமாறு இவ்வுரையை ஆசிரியர் அமைத்துள்ளார். சங்ககால நூல்களை மட்டும் குறிப்பதோடல்லாமல், வைணவ, சைவசமயப் பாடல்களையும் எடுத்துக்காட்டுகளாக அமைத்துள்ள பாங்கு மிக நேர்த்தியாக உள்ளது. வால்மீகி முனிவரின் ஸ்ரீராமாயணமே வழி காட்டியாகக் கம்பருக்கு அமைந்தபோதிலும், கம்பரின் கவித்திறனையும், கவிக் கூற்றையும், நயத்தையும் ஆசிரியர் மிக அழகாகச் சித்தரித்துள்ளார். ஆங்காங்கே வால்மீகி முனிவருக்கும் கம்பருக்கும் உள்ள சில வேறுபாடுகளையும் இவ்வுரையில் காணமுடிகிறது. யுத்த காண்டத்தின் இரணியன் வதைப் படலத்தில் வால்மீகத்திலோ, மற்றவையிலோ காணப்படாத நரசிம்மாவதார நிகழ்ச்சியைக் கம்பர் ஆண்டுள்ளமையைத் திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் அரங்கநாதரே தலையை அசைத்ததாக ஒரு செவிவழிச் செய்தியை ஆசிரியர் காட்டுகிறார்(ப.186).

இவ்வுரையை வரைவதற்கு ஆசிரியர் மிக அரும்பாடுபட்டமை புலனாகின்றது. இவர் அறிவியலையும் ஆங்காங்கே இழைத்துரைக்கின்றார். இக்கருத்து படிப்போருக்கு மிகவும் ஆவலாகப் படிப்பதற்கு ஏதுவாக உள்ளது. அணிந்துரை செய்தவர்களும், ஆய்வுரை விடுத்தவர்களும் ஆசிரியர் முறைப்படித் தமிழைக் கற்கவில்லை; அவருக்குத் தமிழ் மீதுள்ள ஆர்வமே இவ்வுரையை எழுதத் தூண்டியுள்ளது என்று போற்றியுள்ளனர். இதைப்போல் மற்ற நூல்களுக்கும் ஆசிரியர் உரை தந்து தமிழ்த் தாய்க்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று திவ்விய தம்பதிகளான இராமபிரான், சீதாப்பிராட்டி சந்நிதியில் வேண்டுகிறேன்.

**–டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி.**

# மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...

**ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ**
**ஸ்ரீ.உ.வே.அ.கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம்,**
**98842 89887.**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

ஒரு முனிவர், திருமலை அடிவாரத்தில் குளக்கரையில் வாழ்ந்து, கலியுகத்தில் மக்கள் அறநெறிகளைக் கைவிட்டிருப்பதை நினைத்து, அவர்களுக்குத் திவ்விய ஞானத்தையும், பிரம்ம வித்தையையும் கற்பித்துக் கொண்டிருக்கிறார் என்னும் கருத்துள்ள வடமொழிக் கல்வெட்டொன்று அவ்வாழ்வார் கோயிலின் மேல் மதிற் சுவரில் காணப்படுகிறது (Ins. Vol. I.58). இதைக் கொண்டு இதில் குறிக்கப்பெற்ற முனிவர் நம்மாழ்வாரேயாவர் என்று முடிவு செய்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இது வேறொருவரைக் குறிப்பதாகவும் இருத்தல் கூடும். அச்சுதராயன் கி.பி. *1513*–இல் திருமலைக்கு வந்த போது, ஆழ்வார் தீர்த்தக் கரைகளுக்குக் கற்படிகளைக் கட்டி, கிழக்கு மேற்கு ஆகிய இரு திசைகளிலும் சந்தியா வந்தன மண்டபங்களையும் நிறுவி, அத்தீர்த்தத்தின் நான்கு மூலைகளிலும் திருவாழி பொறிக்கப் பெற்ற கற்களை நாட்டி, சக்கர தீர்த்தம் என்று பெயரிட்டுத் திருவேங்கடமுடையானுக்கு உரியதாம்படி செய்தான். இவன், திருவாழிக் கற்களை நாட்டியதற்குக் காரணம், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பேறுகளையும் பெறுவதற்காகவேயாம் என்று கல்வெட்டு அறிவிக்கிறது (Ins.Vol.IV.No.10).

காளத்திச் சைவர்கள், திருவேங்கட நாட்டரசன் இறந்து போனதைத் தமக்குத் தக்க வாய்ப்பாகக் கொண்டு, அத்தீர்த்தம் கபில தீர்த்தம் என்றும், அதற்குரியவர் கபிலேச்வரர் என்றும் வழக்கிட்டு உரிமை கொண்டாடத் தொடங்கிய போது, ஒரு ஏகாங்கி நாராயண ஐயங்கார் என்னும் ஏகாங்கி சைவர்களோடு வாதம் புரிந்து, அஃது ஆழ்வார் தீர்த்தம் என்று நிலை நாட்டித் திருவாழிக் கல்லை நாற்புறங்களிலும் நடவித்தார் என்று திருமலை ஒழுகு அறிவிக்கின்றது.

மற்றொரு கல்வெட்டு (Vol.II.No.29) கோவிந்த ராசர் உபகர்ம நாளில் ஸ்ரீதேவி, பூதேவிகளுடன் தேவர்கள் வந்து நீராடித் தூய்மை அடையும் தீர்த்தத்தில், இராமாநுஜர் ஏற்பாட்டின்படி ஸ்நானத்திற்கு எழுந்தருள வேண்டும் என்று தெரிவிக்கின்றது. இதன் காலம் கி.பி. *1467*. இக்கல்வெட்டுகளால்,





இராமாநுஜர் காலத்தில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது என்பது தெளிவர். கோவிந்தராசர் இன்றும் தீர்த்தவாரிக்காக ஆழ்வார் தீர்த்தத்திற்கு எழுந்தருளுகின்றார். இத்தீர்த்தத்தை விடத் தூய தீர்த்தம் திருப்பதியில் எங்கும் இல்லை. எனவே, கோவிந்தராசர்க்குரிய தீர்த்தமாக இராமாநுஜர் ஏற்படுத்தியது ஆழ்வார் தீர்த்தமே. ஆனால், கி.பி. 1531–க்கு முன் உள்ள கல்வெட்டுக்களில், இத்தீர்த்தம் ஆழ்வார் தீர்த்தம் என்றோ, கபில தீர்த்தம் என்றோ குறிக்கப்பட வில்லை. இது மிகத் தூயதென்று மட்டும் அவை அறிவிக்கின்றன.

எனவே, இதற்கு முதலில் என்ன பெயரிடப்பட்டது என்பது தெரியாவிடினும், இது கோவிந்தராசர்க்குரியதாக இராமாநுசரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்பதில் ஐயமில்லை. நம்மாழ்வார் கோயில், இத்தீர்த்தக்கரையில் இருப்பதனாலோ அன்றிச் சக்கரத்தாழ்வார் தீர்த்தவாரியில் முழுகித் தூய்மை செய்வதனாலோ இதற்கு ஆழ்வார் தீர்த்தம் என்று பெயர் வழங்கி இருத்தல் வேண்டும். அச்சுதராயன் கி.பி. 1531–இல் சக்கர தீர்த்தம் என்று பெயரிட்டான்.

கந்தாடை இராமாநுஜ ஐயங்கார், இத்தீர்த்தத்தின் மேற்குக் கரையில், திருவேங்கடமுடையான் சந்நிதிக்குத் தொண்டைமான் சக்கரவர்த்தி போய்க்கொண்டிருந்ததாகக் கருதப்படும் குகையில் நரசிம்மரையும், தென் கரையில் லக்ஷ்மி நாராயணனையும் பிரதிட்டை செய்து, பிற மதத்தவரால் தீங்கு வாராது தடுத்தனர் என்பது திருமலை ஒழுகு தரும் செய்தி.

தாளப்பாக்கம் திருமலை ஐயங்கார், ஆழ்வார் தீர்த்தத் தென் கரையில் தீர்த்தவாரி மண்டபம் கட்டி அதில் லக்ஷ்மி நாராயணப் பெருமாளை நிறுவினார் என்பது 2.6.1546–ல் எழுந்த கல்வெட்டு (Vol.V.No.97).

கபிலேச்வரர் கோயிலில் ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. அது, "ஸ்வஸ்திஸ்ரீ கோட்டூர் உடையாந் ராயந் ராஜேந்திர சோழனான பிரம்ம ராயன் முனைய தரயன் எடுத்த திருமாளிகை" என்பது. இஃது இரண்டாம் இராஜேந்திர சோழனான முதற்குலோத்துங்கன் காலத்தது ஆதல் (கி.பி.1070–1075) வேண்டும். இவன் கட்டிய திருமாளிகை கபிலேச்வரர் கோயிலாக இருக்கலாம். ஏனெனில் இவன் சைவத்தில் மிக ஊற்றமுள்ளவன். எனவே, இது சிவபிரான் கோயில் எனல் வேண்டும். இங்குத் திருமாளிகை என்பது கோயிலைக் குறிக்காது எனவும், எவருடைய கோயில் என்று விளக்கமாக எழுதப்படாதிருத்தலால், இது கடவுளுக்குரிய கோயில் என்றால் பொருந்தாது எனவும், வைணவ மரபில் ஆசார்யர் இருக்குமிடத்தை திருமாளிகை என்று சொல்வது பெருவழக்காதலின், நம்மாழ்வாருக்காக முதலில் எடுப்பித்தது இத்திருமாளிகை எனவும் கூறுவர் ஒரு சிலர்.

ஆழ்வார் தீர்த்தத்தில் நான்காம் சுனையில், திருவேங்கடமுடையான் திருவுருவம் ஒன்று இருந்ததாகவும், அதற்குச் சொட்டைத் திருமலை நம்பி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் நால்வழிச் சந்தி ஏற்படுத்தியதாகவும் தெரிகிறது. "ஆழ்வார் தீர்த்தத்தில் நாலாஞ் சுனையில், திருவேங்கடமுடை

யான்னாள்வழி வந்த விட்டவன் பிரசாதம்” என்பது அச்செய்தியை விளக்கும் கல்வெட்டு, இப்போது அவ்வுருவம் எங்குளது என்பது தெளிவாகவில்லை.

தவிர, இவ்வாழ்வார் தீர்த்தம் திருவேங்கட முடையானுக்கு உரியதென்றும், (Vol.IV.No.10) ஒரு கல்வெட்டினால் அறிகிறோம். அது, “திருவேங்கட முடையான் திவ்ய தீர்த்தமான திருப்பதியில் ஆழ்வார் தீர்த்தத்தை” என்பது, இத்தீர்த்தத்தின் அருகில் அன்ன சத்திரங்கள் பல இருந்தன.

நம்மாழ்வாருக்குத் திருவிழாச் செய்யும் போது, திருவத்யயனம் பத்தாம் திருநாளாகிய சாத்துமுறை விசாக நட்சத்திரத்து நாளில், ஆழ்வார் தீர்த்தங் கரையில் ஆழ்வார் திருத்தேரில் ஏறி அருளித் திருக்கோயிலை வளையவரும் வழக்கம் கி.பி. 1544–ல் இருந்தது. இப்போது அவ்விழா நடப்ப தில்லை.

திருப்பதியில் பாஷ்யகாரர் அக்ரகாரத்தில் கோவிந்தராசர் வடவண்டை மாட வீதியில் கி.பி. 1544–இல் ஒரு நம்மாழ்வார் கோயிலை ஆரவீடு கொண்ட ராஜா என்பவன் கட்டினான்.

பின்னர், அதை ஒட்டிக் கிழக்கில் இருக்கும் இராமாநுஜ கூடத் (பெரிய ஜீயர் மடம்)திற்கு ஆண்டு ஒன்றுக்கு 5713 ரேகைப் பொன் வருவாய் உள்ள பத்து ஊர்களைத் தானமாகத் தந்து வைணவ யாத் திரிகர்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்தான்.

இவ்விராமாநுஜ கூடத்தில் ஒரு நாளைக்கு ஏறக்குறைய 500 மரக்கால் அரிசி செலவிடப்பட்ட தாக (Vol.V.No.125) அறிகின்றோம். இந் நம்மாழ்வார் சந்நிதிக்கு இராமாநுஜ கூடத்து நம்மாழ்வார் கோயில் என்பது பெயர். இங்கு, கி.பி. 1553–இல் பன்னிரண்டு நாட்கள் திருவிழா நடந்து வந்தது.





ஆழ்வார் தீர்த்தத்திற்குப் போகும் வழியில் கிழக்காக ஒரு கோபுரம் மட்டும் காணப்படுகிறது. அஃது அச்சுதப் பெருமாள் கோயில், அச்சுத தேவ ராயனால் கட்டப்பட்டு பெருமாளின் திருவுரு நிறுவப்பட்டது. அதைச் சுற்றிலும் 120 வீடுகள் அடங் கிய அக்ரகாரத்தைக் கட்டி அதற்கு அச்சுதராயபுரம் என்று பெயரிட்டான் அவன். கி.பி. 1538–இல் திருவேங்கடமுடையான் ஸ்ரீபண்டாரத்திற்கு நானூறு பணம் செலுத்தி, அச்சுதப் பெருமாள் கோயிலும், அக்ரகாரமும் கோட்டூரில் கட்டுவதற்கு நிலம் வாங்கினான் (Vol.IV.No.108). அவ்வரசன் காலத்துக் குப்பின், அக்கோயிலும் ஊரும் சீர்கெட்டுப் போய் விட்டன. ஆனால், கோபுரம் ஒன்று மட்டும் இதற்குச் சான்று பகர்கின்றது. இப்போது நரசிம்ம தீர்த்தக் குளக்கரையில் சிறிது உடைந்து போன நிலையில் பூசையின்றி அமைக்கப்பட்ட திருவுருவம் அச்சுதப் பெருமானே என்கின்றனர். அதன் அழகும், பெருமித மும் காண்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும்.

திருமங்கையாழ்வார், நாதமுனிகள், திருக்கச்சி நம்பி, வரதராசப் பெருமாள் முதலானவர்களுக்குக் கோயில்களும், கோவிந்த ராசர் கோயிலில், திருமலைநம்பி, இராமாநுஜர் (கி.பி.1220), கூரத்தாழ்வான், மதுரகவி ஆழ்வார் முதலியவர் களின் கோயில்களும் பல்வேறு காலத்தில் கட்டப்பட் டன. அடிப்புளியில் கி.பி. 1300–க்கு முன் பெரியாழ்வார் கோயில் கட்டப்பட்டது.

சாளுவ நரசிம்மனால், திருமலையிலும், திருப் பதியிலும் இராமாநுஜ கூடங்கள் கட்டப்பட்டு அவற் றிற்குத் தன் ஆசார்யரான கந்தாடை இராமாநுஜ ஐயங்காரைத் தலைவராக அவன் நியமித்தான், இவற்றின் வரலாறுகள் விரிப்பிற் பெருகும்.

மேலும் வளரும்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 54

**இடமிருந்து வலம்**

1. பெரியாழ்வார், ஆண்டாள் நாச்சியார் அவதரித்த திவ்ய தேசம்....(9)
5. நவநரசிம்மரில் ஒருவர்...(9)
10. சப்தரிஷிகளில் ஒருவர் ...(5)
17. கோயில்களில் பிரார்த்தனைகளுக்காக இதை ஏற்றி வைப்பர்...(7)
21. பெரியாழ்வார் பெருமாள் மீது பல்லாண்டு பாடிய திவ்ய தேசம்...(6)

**வலமிருந்து இடம்**


04. பேசும் பெருமாள் இருக்கும் தலம்..(6)
08. விஷ்ணுவின் பத்து அவதாரங்களின் ஒரே பெயர்....(6)
19. சீதையின் கணவர்....(3)
20. ஐப்பசி மாதம் தேய்பிறையில் வரும் ஏகாதசியின் பெயர்....(4)
22. காக்கும் கடவுள்....(4)

**மேலிருந்து கீழ்**

01. பிருகு முனிவரின் மகளாக அவதரித்த லட்சுமியை மணம் புரிய ரங்கநாதராக திருமால் எழுந்தருளிய திவ்ய தேசம்...(8)
02. ஸ்ரீரங்கநாயகி என்ற திருநாமத்துடன் தாயார் சேவை சாதிக்கும் இரண்டு திவ்ய தேசங்களில் ஒன்று.....(6)
03. துரோணர் கேட்டார் என்பதற்காக தன் கட்டை விரலையே கொடுத்தவன்.....(5)
06. ஆண்டாளின் புகழ் வடக்கே பரவக் காரணமானவர்....(8)
07. வாலியின் மனைவி....(2)
10. பஞ்ச பூதங்களில் ஒன்று.....(3)
11. பாழியந் தோளுடையவன்....(6)
12. திருமழிசையாழ்வார் அவதரித்த ஊர்....(5)
14. இராமனின் சகோதரர்களுக்கு கோயில் உள்ள மாநிலம்....(3)
15. இராமாநுஜருக்கு எத்தனை ஆசாரியர்கள்...(3)
16. பெருமாள் உத்தான சயனத்தில் சேவை சாதிக்கும் திவ்ய தேசம்...(6)
17. வில்வித்தையில் சிறந்தவன்....(5)
18. மகாபலிக்காக யாகத்தை நடத்தியவர்....(8)
22. கல்லால் ஆன கருட வாகனம் உள்ள திவ்ய தேசம்...(6)

**கீழிருந்து மேல்**

09. இங்கு தன் மனைவியோடு வசித்து வந்தார் கிருஷ்ண பகவான்.....(4)
13. விஷ்ணு வழிபாட்டிற்குரிய ஆகம முறைகளில் ஒன்று...(5)



தொகுப்பு :
திரு. எஸ். ராஜகுமார்,
சென்னை, 8124930259

புதிருக்கு விடை அறிய
44ம் பக்கம்
பார்க்கவும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி
**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன.

–பிரதான ஆசிரியர்

சென்ற இதழின் தொடர்ச்சி...

திருவேங்கடத்திலேயே திருமாலைக் காண விரும்பிய திருமழிசையாழ்வாரிடம் ஒருவர், "நாம் நினைத்தவை கை கூடிடவும், நமக்கு வேண்டாதவை நம்மை விட்டு நீங்கவும் வேண்டும். இவை திருவேங்கட யாத்திரை செய்து கொண்டிருந்தால் நிகழுமா?" என்று கேட்டார்.

உடனே ஆழ்வார், "அளவிலும், புகழிலும் மிக உயர்ந்த வேங்கடத்தைச் சென்று வணங்குங்கள். இதற்காக வெகு தூரம் நடக்க வேண்டாம். உங்கள் ஊரிலிருந்து புறப்படும் போதே உங்களுக்குப் புலப்பட்டு, பாவங்களையெல்லாம் போக்கும் படியாக ஆகாயப் பரப்பு முழுவதையும் அடைத்துக் கொண்டு மிக உயர்ந்து விளங்குகிறது. அதனைப் பரபரப்பின்றி நின்று வணங்குங்கள்! வினைகளை வேகவைத் தழிக்கும் வேங்கடம் ஆகையால் இது இயற்கையாகவே, நிலையாகப் பாவங்களைப் போக்கடிக்கும் தன்மையுடையது. பிரமன், சிவன் முதலியவர்கள் தங்கள் பதவிகளை இத்திருமலையில் அவனை வணங்குவதன் மூலமாகவே பெறுகின்றனர். ஆகையால் இங்கே நீங்கள் கேட்டது கிடைக்கும்'' என்று ஆழ்வார் கூறும் பாசுரம் இது.

*''சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை*
*நின்று வினைகெடுக்கும் நீர்மையால் - என்றும்*
*கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத்தானும்*
*அடிக்கமல மிட்டேத்தும் அங்கு!''*

–நான்முகன் திருவந்தாதி 42

மேகமண்டலத்தளவும் உயர்ந்துள்ள திருமலையில் எழுந்தருளியிருப்பவனாகிய திருவேங்கடநாதனுக்கு திருவந்திக் காப்பு எடுப்பதற்காக காலை, மாலை வேளைகளில் திருவாராதனத்திற்குப் புகுந்தார்கள். யார் அவர்கள்? தட்சனின் சாபத்தினால் கலை குறைந்து வந்து சரணமடைந்த சந்திரனைத் தலை மீது கொண்டு அருளிய ருத்ரனும், திருநாபிக் கமலத்தில் பிறந்து படைப்புத் தொழில் செய்யும் பிரமனும், முத்துக்குடை முதலிய



# திருமழிசை ஆழ்வார் போற்றும் திருவேங்கடம்

– திரு. ஸ்ரீநிவாசன்,
பரமகுடி,
94425 78967



## திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர் : 05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாசமங்காபுரம் :12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி : 01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி : 2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி : 03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பாயகுண்டா : 30 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம் : 65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயணவனம் : 37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம் : 48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம் : 116 கி.மீ.

னவற்றைத் தாங்கிக் கொண்டு இவனைத் தொழப் புகுவர்! எனவே நாமும் புகுந்து திருவேங்கட மலையில் திருமாலைத் தொழுது அருள் பெறுவோம்" எனத் திருமழிசையாழ்வார் கூறும் பாசுரம் இது.

"மங்குல் தோய் சென்னி வடவேங்கடத்தானை
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான் - திங்கள்
சடையேற வைத்தானும் தாமரை மேலானும்
குடையேறத் தாங்குவித்துக் கொண்டு!"

–நான்முகன் திருவந்தாதி 43

ஒருவர் திருமழிசையாழ்வாரிடம், "திருவேங்கட நாதனை பிரம்மாவும், சிவனும் வணங்குவதற்குக் காரணம் என்ன?" என்று வினவினார். அதற்கு விடை கூறுகிறார் ஆழ்வார். இராவணன் பிரம்மனை நோக்கிக் கடுந்தவம் செய்து வரம் வேண்டினான். அப்போது பிரமன் மடியிலே குழந்தை வடிவாய் தூங்குவது போலக்கிடந்தும், பத்துத் தலைகளையுடைய இராவணன் லோக கண்டகனாய் விளங்குவான் என அறிவிப்பதற்காகவும், தான் இராமனாய் அவதாரம் செய்து இராவணனின் தலைகளைக் கிள்ளி எறியப்போவதை உணர்த்திடவும், தன் திருவடிகளிலே, இராவணனின் பத்துத் தலைகளையும் கீறி எண்ணிக் காட்டினான் பெருமான்.



இப்படி பிரமனின் நலம் கருதி, முன்னொரு காலத்தில் இப்படித் தலை எண்ணி மறைந்த பாலனாகிய திருமால் நிற்குமிடமே சோலைகள் சூழ்ந்த திருமலை. முற்ற மூத்துக்கோல் துணையா முன்னே நடக்கும் தசை வருமுன்னே விரும்பிப் போங்கள்! கிழத்தனம் வந்து விட்டால் திருமலை ஏறிச்செல்வது இயலாத காரியம்.ஆகையால், சக்தியுள்ள போதே சென்று வணங்குமாறு நம்மை ஆழ்வார் பணிக்கும் பாசுரம் இது.

"கொண்டு குடங்கால் மேல்
வைத்த குழவியாய்
தண்ட அரக்கன் தலை தாளால்
- பண்டெண்ணி
போம்குமரன் நிற்கும் பொழில்
வேங்கட மலைக்கே
போம்குமரர் உள்ளீர்! புரிந்து"

–நான்முகன் திருவந்தாதி 44

இவ்வாறு சாமான்ய மக்களைத் திருமழிசையாழ்வார் ஆற்றுப்படுத்துகிறார். உடனே ஒருவர் "திருமலையில் சாமான்ய மக்களுக்கு மட்டும்தானா நல்லருள் கிட்டும்?" என்று கேட்டார்!

உடனே ஆழ்வார், "பரமபதத்தில் ஸ்ரீவைகுண்டனை எப்போதும் சேவித்துக்

கொண்டிருக்கும் நித்ய சூரிகளுக்கும் திருமலையே நல்லருள் கிட்டிடச் செய்யும்!" என்கிறார்.

"தேன் ஒழுகும் தாமரை போல மிக இனியதாய் இருக்கும் திருமாலின் திருவடிகளில் விருப்பத்துடன் மலர், சுடர், தூபம் முதலியவற்றைக் கொண்டு பூஜித்து, அபாயமுடைய தேசமானதால் என்ன வருமோ? என்னும் பக்தர்கள் வெட்டி வீழ்த்திய மரக் காடு போலே பெயராமல் வணங்கி நிற்கின்றனர்.

தன்னுடைய உயர்வானது நன்கு தெரியும்படி யாக எல்லாவிடத்திலும் நீர்மை முதலிய குணங்க ளால் குறைவற்று உயர்ந்து, விழுந்து கிடக்கும் மரங் களின் நடுவே ஓங்கி நிற்கும் மரம் போல நிற்கிறான் திருமால். அவனுடைய திருவேங்கடமே இவனுக் கும், இவன் அடியாருக்கும் அனைத்து வருத்தங் களையும் போக்கிடும், குளிர்ந்த அருவிகளையு டைய தலமாகும். அதுவே பரமபதத்தில் உள்ள நித்திய சூரிகளுக்கும், மண்ணுலகில் வாழும் அடி யவர்களுக்கும் மாநிதியாகும்" என்று ஆழ்வார் பாடுகிறார்.


***"புரிந்து மலரிட்டுப் புண்டரீகப் பாதம்***
***பரிந்து படுகாடு நிற்ப - தெரிந்தெங்கும்***
***தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே***
***வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு!"***

–நான்முகன் திருவந்தாதி 45

"திருமலையில் அறிவற்ற விலங்குகளும், அதிகம் படிப்பறிவு இல்லாத மலைவாழ் மக்களும் கூட அடியார் பணி செய்யும் பெருமையைப் பெற்றுள்ளனர். அப்படிப்பட்ட திருமலையை நாடெல்லாம் வாழ்வோர் வணங்க வேண்டாமா?" எனத் திருமழிசையாழ்வார் எண்ணுகிறார்.

வேங்கடத்தில் வாழ்கின்ற ஒரு யானை இரவில் முழுநிலவைக் காண்கிறது. மங்குல் தோய் சென்னி வடவேங்கடம் அல்லவா. அருகிலிருக்கும் முழு மதியைத் திருவேங்கடவனுக்கு அணையா விளக் காக வைக்க வேண்டுமென்று எண்ணித் தன் துதிக் கையை நீட்டி, நிலவைப் பற்றி இழுக்க முயற்சிக் கிறது. ஒரு முறை முயற்சித்தும் நிலவை அடைய முடியாவிடினும் இறைப்பணியில் உள்ள பேராசை யால் எப்போதும் கை நீட்டிக் கொண்டே கிடக்கிறது. அப்போது யானை பிடிப்பதற்காக வந்த வேடர்கள், இந்த யானையை வளைத்துக் கொண்டனர்.

திருமாலுக்குத் திருவிளக்காய் வைப்பதற்குச் சந்திரனைப் பிடிக்க முயற்சிக்கும் யானையோ தன்னை வேடர்கள் வளைத்துக் கொள்வதை அறி யாது நிற்கிறது. அப்போது திருமலையில் வாழும் மலைவாழ் வீரர்கள், யானையை வளைத்த வேடர் களைத் துரத்திட வில்லை எடுக்கிறார்கள். அக்குறவர் கள் திருமலையில் இறைவன் சன்னிதானத்தில் வாழ்வதால் அவர்களுக்கு இவ்வெண்ணம் வந்தது. இப்படிப் படிப்பறிவு குறைந்தவருக்கும் பேரறிவு கொடுக்கும் திருவேங்கட மலையை, அறிவில்லா தார் அறிவுடையார் ஆகிய அனைவரும் வலம் வந்து கூத்தாடினால், அதுவே உலகிற்கு நன்மையாகும். வனவிலங்காகிய யானைக்கே பாது காப்புத் தரும் திருமலை, உலகத் தாருக்குப் பாதுகாப்புத் தரு மல்லவா! என வியந்து பாடுகிறார்.



***"வைப்பன் மணிவிளக்கா***
***மாமதியை மாலுக்கென்று***
***எப்பொழுதும் கை நீட்டும்***
***யானையை - எப்பாடும்***
***வேடுவளைக்கக் குறவர்***
***வில்லெடுக்கும் வேங்கடமே***
***நாடு வளைத்து ஆடுதுமேல் நன்று!"***

– நான்முகன் திருவந்தாதி 46

தொடரும்...

# தேவுனிகடபா
# ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்

2021 பிப்ரவரி
13 முதல் 21 வரை



12-02-2021 வெள்ளிக்கிழமை
பகல் : தீக்ஷா, திருமஞ்சனம்
இரவு : சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம்

13-02-2021 சனிக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

14-02-2021 ஞாயிற்றுக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

15-02-2021 திங்கட்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

16-02-2021 செவ்வாய்க்கிழமை
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்

17-02-2021 புதன் கிழமை
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : கருட வாகனம்

18-02-2021 வியாழக்கிழமை
பகல் : கல்யாணோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

19-02-2021 வெள்ளிக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : தூளி உத்ஸவம்

20-02-2021 சனிக்கிழமை
பகல் : சர்வ பூபால வாகனம்
இரவு : குதிரை வாகனம்

21-02-2021 ஞாயிற்றுக்கிழமை
பகல் : வஸந்தோத்ஸவம்,சக்ர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம், ஹம்ஸ வாகனம்



# ஸ்ரீநிவாசமங்காபுரம்
# ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்

**2021 மார்ச்**
**02 முதல் 10 வரை**

**01-03-2021 திங்கட்கிழமை**
இரவு : சேனாதிபதி உத்ஸவம்
அங்குரார்ப்பணம்

**02-03-2021 செவ்வாய்க்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**03-03-2021 புதன் கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**04-03-2021 வியாழக்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**05-03-2021 வெள்ளிக்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**06-03-2021 சனிக்கிழமை**
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**07-03-2021 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**08-03-2021 திங்கட்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**09-03-2021 செவ்வாய்க்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**10-03-2021 புதன் கிழமை**
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

# திருப்பதி
# ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்

**2021 மார்ச்**
**04 முதல் 13 வரை**



**03-03-2021 புதன் கிழமை**
இரவு : மூஷிக வாகனத்தில் விநாயக ஸ்வாமி
அங்குரார்ப்பணம்

**04-03-2021 வியாழக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**05-03-2021 வெள்ளிக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**06-03-2021 சனிக்கிழமை**
பகல் : பூத வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**07-03-2021 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : மகர வாகனம்
இரவு : சேஷ வாகனம்

**08-03-2021 திங்கட்கிழமை**
பகல் : அதிகார நந்தி வாகனம்
இரவு : திருச்சி உத்ஸவம்

**09-03-2021 செவ்வாய்க்கிழமை**
பகல் : வ்யாக்ர வாகனம்
இரவு : யானை வாகனம்

**10-03-2021 புதன் கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : திருச்சி உத்ஸவம்

**11-03-2021 வியாழக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : நந்தி வாகனம் (மஹா சிவராத்திரி)

**12-03-2021 வெள்ளிக்கிழமை**
பகல் : புருஷாம்ருக வாகனம்
இரவு : கல்யாணோத்ஸவம் (குதிரை வாகனம்)

**13-03-2021 சனிக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனத்தில் நடராஜஸ்வாமி, திரிசூல ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம், இராவணாசுர வாகனம்



# திருப்பதி
# ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

**2021 மார்ச் 13 முதல் மார்ச் 21 வரை**

**12-03-2021 வெள்ளிக்கிழமை**
இரவு : சேனாதிபதி உத்ஸவம்
அங்குரார்ப்பணம்

**13-03-2021 சனிக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**14-03-2021 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**15-03-2021 திங்கட்கிழமை**
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**16-03-2021 செவ்வாய்க்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**17-03-2021 புதன்கிழமை**
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**18-03-2021 வியாழக்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**19-03-2021 வெள்ளிக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**20-03-2021 சனிக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**21-03-2021 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

# விற்றுவக் கோட்டு அம்மானே

ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந்நாராயணன் இப்பூவுலகில் பிறப்பெடுத்த ஜீவாத்மாக்கள் அனைவரும் பக்தி மார்க்கத்தினைக் கைக்கொண்டு பிறவாப் பெருநிலையினை அடைந்திட வேண்டும் என்கிற கருணையினால் தாமே பற்பல அவதாரங்கள் செய்து சாஸ்திரங்களை உபதேசித்தும், ஆழ்வார்களின் அவதாரம் மூலமாக நாலாயிரத் திவ்யப் பிரபந்த பாசுரங்களை அருளியும், சரணாகதி தத்துவங்களை உலகோருக்கு உணர்த்தியும், ஜீவாத்மாக்கள் உய்வடைவதர்க்கு பேரருள் புரிகிறார். எம்பெருமானின் திருவடிகளில் சரணாகதி செய்வது ஒன்றினைத் தவிர ஜீவாத்மாக்களுக்கு உய்வடைவதர்க்கு வேறு வழி ஒன்று இல்லை என்பதில் ஆழ்வார்கள் பாசுரங்களின் வழியே தெள்ளத் தெளிவாக உபதேசிக்கின்றனர்.

**குலசேகராழ்வார் :**

சேரநாட்டில் திருவஞ்சிக்களத்தில் அரசனாக அவதாரம் செய்த குலசேகராழ்வார் எம்பெருமானின் இராமாவதாரத்தில் அதீத ஈடுபாடு கொண்டு தினசரி இராமாயண காலக்ஷேபம் கேட்பதை தம் பிறவிப் பயனாகக் கருதியவர். சீதாதேவியினை மீட்கும் பொருட்டு இராமபிரான் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்றார் என்கிற கட்டத்தில் குலசேகராழ்வார் தம்முடைய படைகள் இலங்கை நோக்கிச் செல்வதற்கு தம்மை மறந்த நிலையில் உத்தரவிட்டார்.

**குடப்பாம்பு :**

ஸ்ரீவைஷ்ணவ பாகவதர்களிடத்தில் அதீதமான பற்று கொண்டிருந்த குலசேகராழ்வார் பக்கலிலே அவர்களைப் பற்றி அவதூறு ஏற்படுத்தும் வண்ணம் மந்திரிகள் ஆழ்வாரது திருவாபரணம் ஒன்றினை வேண்டுமென்றே மறைத்து வைத்து ஸ்ரீவைஷ்ணவர்கள் மேல் பழிசுமத்தினர். இது கேட்டு வெதும்பிய ஆழ்வார் ஒரு குடத்தில் மிகுந்த விஷமுடைய பாம்பினை விட்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் கள்வர்கள் எனில் பாம்பு என்னை தீண்டக் கடவது என்று கூறியபடி குடத்தில் கையினை விட, பாம்பும் தீண்டாமல் இருக்க, திருமால் அடியார்கள் தூய்மையானவர்கள் என நிரூபணம் செய்வதற்கு தம்முடைய உயிரினையே பணயம் வைத்த பாகவதோத்தமர்.

**திருவிற்றுவக்கோடு :**

மலைநாட்டு திவ்யதேசங்களில் ஒன்றான திருவிற்றுவக்கோட்டில் சேவை சாதிக்கும் உய்யவந்த பெருமாளின் திருவடிகளில் உன் சரணல்லால் சரணில்லை எனச் சரணடைந்த குலசேகராழ்வார் எம்பெருமான் ஒருவனைத் தவிர ஜீவாத்மாக்களை



– திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி,
94438 79592



கரையேற்றும் சக்தி வேறு எவருக்கும் இல்லை என்பதை இயற்கை நிகழ்வுகளை உருவகப்படுத்தியும், உதாரணமாகக் காட்டியும் உலகோருக்கு திருவிற்றுவக்கோட்டுப் பாசுரங்கள் மூலமாக உபதேசிக்கிறார்.

**தாயருள் நாடும் குழந்தை :**

பெற்ற தாயானவள் ஏதோ ஒரு காரணத்தால் குழந்தையினை வெறுத்துத் தள்ளினாலும் அவளின் அன்பினையே நாடி அழுது கொண்டு ஓடி அவளின் கால்களைத் தழுவிக் கொள்ளும். அதே போன்று விற்றுவக்கோட்டம்மான் ஆழ்வாரினை வெறுத்து ஒதுக்கினாலும் அவனின் திருவடிகளை விடாமல் பற்றிக் கொண்டு உய்வடைவதைத் தவிர மற்றொரு புகல் இல்லை என எம்பெருமானைத் தாயாகவும் தம்மை குழந்தையாகவும் பாவித்து பாசுரமிடுகிறார் குலசேகராழ்வார்.

*"அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்*
*அருள்நினைந்தே யழும்குழவியதுவே போன்றிருந்தேனே."*

**கற்புடைக் குலமகள் :**

பார்ப்பவர்கள் அனைவரும் இகழும்படியான செயல்களைக் கணவன் செய்தாலும் கணவனையன்றி வேறொரு புருஷனை மனத்தாலும் நினைக்காத கற்புடைய மகளிர்போல் வித்துவக்கோட்டு எம்பெருமான் தம்மை கைகொள்ளாமல் விட்டு விட்டாலும், திருமால் அடியாரான தமக்கு துன்பங்களை அனுபவிக்குமாறு செய்தாலும், அவனின் திருவடிகளையே தஞ்சமாகக் கொள்வதாக எம்பெருமானை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் வரித்துப் பாசுரமிடுகிறார்.

*"கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்*
*கொண்டானை யல்லா லறியாக் குலமகள்போல்"*

**தார்வேந்தன் :**

நாட்டினை ஆளும் மன்னனானவன் கொடுமையான துன்பங்களை மக்களுக்குச் செய்தாலும் அவனது செங்கோலின் நன்மை பயக்கும் ஆட்சியினையே எதிர்பார்த்து குடிமக்கள் வாழ்வது போல் எம்பெருமான் ஆழ்வாருக்கு எத்தனைதான் முகம் காட்டாமல் இருந்தாலும் அவன் மீதுள்ள பற்று ஒன்றே தம்மை கரை சேர்க்கும் என்று வாழ்ந்திருப்பதாக எம்பெருமானை மன்னனாகவும் தம்மை குடிமகனாகவும் உருவகம் செய்கிறார் ஆழ்வார்.

*"தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்*
*கோல்நோக்கி வாழும் குடிபோன்றி ருந்தேனே."*

**மருத்துவன் :**

தம்முடைய நோய் தீர்க்கும் பொருட்டு வாளால் அறுத்தும், ஊசியால் சூடுபோட்டும் மருத்துவம் செய்யும் வைத்தியனை நோயாளன் வெறுக்காமல் நோய் தீரும்வரை விரும்புவதைப் போல, ஆழ்வாருக்கு எத்தனைதான் துன்பங்கள் எம்பெருமான் அளித்தாலும் அவை அனைத்தும் தம்முடைய வினைகள் முற்றும் ஒழியவே என்றென்னும் எம்பெருமானின் கருணை என அனைத்தையும் ஏற்றுக் கொண்டு வாளாவிருப்பதாக தம்மை நோயாளியாகவும் எம்பெருமானை வைத்தியனாகவும் எண்ணிப் பாசுரமிடுகிறார்.

*"வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்*
*மாளாத காதல் நோயாளன்போல்"*

**மாப்பறவை :**

நடுக்கடலில் செல்கின்ற மரக்கலத்தின் பாய்மரக் கொம்பிலிருந்து புறப்பட்டு கரையினைத்



தேடிப் பறந்து செல்லும் பறவை, கரையினைக் காணாமல் அனைத்து இடங்களும் கடல் நீராக இருப்பதைக் கண்டு, வேறு வழியில்லாமல் மீண்டும் பாய்மரக் கொம்பினை அடைவதுபோல் பரமாத்மாவினை விட்டுச் செல்கின்ற ஜீவாத்மா கடைத்தேற்றம் அடையாது மீண்டும் பரமாத்மாவின் திருவடிகளில் சரணாகதி அனுஷ்டிப்பதுபோல் எம்பெருமானை பாய்மரமாகவும், தம்மைப் பறவையாகவும் உருவகப்படுத்தி பாசுரமிடுகிறார் குலசேகராழ்வார்.

*"எங்கும் போய்க் கரைகாணா தெறி கடல்வாய் மீண்டேயும்*
*வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே"*

**வெங்கதிரோன் :**

விடியற் காலைப் பொழுதில் கூம்பிய செந்தாமரை மலரின் அருகில் வெப்பம் அளிக்கின்ற சிவந்த அனல் இருந்தாலும் தாமரை அவ்வெப்பத்தினால் இதழ் விரித்து மலராது. தகதகக்கும் சூரியனின் ஒளிக்கதிர்களின் வெப்ப ஸ்பரிசத்தி னால் மட்டுமே மலரும்.

கடுமையான துன்பங்களால் நெகிழாத ஆழ்வாரின் மனம் எம்பெருமானின் எல்லையில்லா திருக்கல்யாண குணங்களின் தன்மையாலே நெகிழ்ந்து உருகுகிறது என எம்பெருமானை சூரியனாகவும் தம்மை செந்தாமரை மலராகவும் எண்ணிப் பாசுரமிடுகிறார்.

*"செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம்*
*அந்தரம்சேர் வெங்கதிரோற் கல்லா லலராவால்"*

**மாமுகில் :**

நன்கு செழித்து வளர்ந்து பயிர்கள் மேலும் வளர்வதற்கு மழையினை வானம் பொழியா விடி னும் கருநிற மேகங்கள் ஒரு நாள் மழையினைப் பொழியும் என மேகங்களின் வருகையினை எதிர்பார்த்து பயிர்கள் காத்திருப்பதை போல வித்துவக்கோட்டு எம்பெருமான் தமக்கு எத்தனை தான் துயரங்கள் அளித்தாலும் ஆழ்வாரின் சிந்தனை சிறிதும் மாறாமல் எம்பெருமானையே எப்பொழுதும் நினைத்திருக்கும் என எம்பெருமானை மேகமாகவும் தம்மைப் பயிராகவும் உருவகப் படுத்துகிறார்.

*எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்*
*மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்*

**தொடுகடல் :**

பல இடங்களில் உருவாகி பலதிசைகளில் ஓடி வருகின்ற அத்தனை ஆறுகளும் முடிவில் கடலினை அடைவதுபோல்

**தியாக பிரம்மம்**

தியாக பிரம்மம் என்று போற்றப்படும் தியாகராஜ சுவாமிகள் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராவர். இவர் தஞ்சாவூருக்கு அண்மையில் உள்ள திருவையாறில் வாழ்ந்து சமஸ்கிருத மொழியில் பயிற்சிபெற்றார்.

தியாகராஜ சுவாமிகள் இளம் வயதிலிருந்து இராம, சீதா, லக்ஷ்மண விக்ரகங்களுக்கு பூஜைகள் செய்தார். இராம கீர்த்தனைகள் பல இயற்றி பாடியுள்ளார். தியாகராஜ சுவாமிகளின் பிருந்தாவனம் காவிரி ஆற்றங்கரையில் திருவையாற்றில் அழகாகக் காட்சியளிக்கின்றது. ஆண்டு தோறும் பல இடங்களிலிருந்து இசைக் கலைஞர்கள் கூடி தியாக பிரம்மத்திற்கு பஞ்ச ரத்னக் கீர்த்தனைகள் பாடுவது என்பது இசையுலகிற்கே ஒரு விழாக்கோலமாக அமைந்த ஒன்றாகும்.



குலசேகராழ்வாரின் எண்ண ஓட்டங்கள் பல திசைகளில் திரிந்து ஓடினாலும் பக்தியின் வசப்பட்டு எம்பெருமானின் திருக்கல்யாண குணங்கள் என்னும் கடலினையே முடிவில் அடைகின்றன என தம்மை ஆறாகவும் எம்பெருமானைக் கடலாகவும் பாவிக் கிறார் ஆழ்வார்.

*"தொக்கிலங்கு யாறெல்லாம் பரந்தோடி*
*தொடுகடலே*
*புக்கன்றிப் புறம் நிற்க மாட்டாத"*

**செல்வம் :**

நிலையற்ற செல்வத்தை வேண்டாமல் எம்பெருமான் திருவடிகளை புகலெனப் பற்றினவன் உஜ்ஜீவனத்திற்குத் தேவையான செல்வம் தாமே சென்று சேருவதுபோல் மாயையின் பொருட்டு மற்ற ஐச்வர்யங்களை வேண்டாமல் ஆழ்வார் இருப்பதால் ஆழ்வாரினையே ஐச்வர்யமாக ஏற்றுக் கொள்ளும் படி எம்பெருமானை வேண்டி நிற்பதாக எம்பெருமானை செல்வத்திற்கு உரியவனாகவும் தம்மை செல்வமாகவும் உருவகப்படுத்தி பாசுர மிடுகிறார் ஆழ்வார்.

*"நின்னையே தான்வேண்டி நீள்செல்வம்*
*வேண்டாதான்*
*தன்னையே தான் வேண்டும் செல்வம்போல்"*

**நண்ணார் நரகம் :**

எண்ணற்ற துயரங்கள் தந்து தமக்கு முகம்காட் டாமல் ஒதுக்கித் தள்ளினாலும், இடர்கள் தந்து விலக்கினாலும் விற்றுவக்கோட்டு எம்பெருமானின் திருவடிகளில் சரண்புகுவதை பற்றி நிற்கும் உறுதிப் பாட்டில் குலசேகராழ்வார் பாசுரங்கள் பொழிந்து மற்றாரும் பற்றிலேன் என்று அவன்தாள் நயந்தால் ஜீவாத்மாக்கள் நரகம் சென்று நலியாமல் ஸ்ரீவைகுந்த புருஷார்த்தம் கிடைக்கும் என்பதை பலப்பாசுரத்தில் தலைக்காட்டுகிறார் ஆழ்வார்.

*"கொற்றவேல் தானைக் குலசேகரன் சொன்ன*
*நற்றமிழ் பத்தும் வல்லார் நண்ணார் நரகமே."*

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநு ஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக் கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக் கோயிலில் இடம் பெற்றுள்ளனர்.

☎ 0877–2264592.

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக் கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும். ☎ 0877–2264584.

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷி யால் இங்குள்ள சிவலிங்கம் தோற்று விக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப் படுகிறது. ☎ 0877– 2264587.

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலை வில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ 0877–2264586.

# 108 திவ்விய தேச வைபவம்







# திருக்குறுங்குடி

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

இது "வைணவ வாமநம்" சேவிக்க சேவிக்க மேன்மேலும் அர்ச்சாவதார வைபவத்தில் ஈடுபட வைக்கும் "விபவலாவண்யம்" அர்ச்சையும், விபவமும் இணைந்த பேரழகு.

காரியாரும், உடைய நங்கையும் இந்தப் பெருமானை வேண்டியே நம்மாழ்வாரைப் பெறும் பாக்யத்தைப் பெற்றார்கள்.

**இனி புராண வரலாறு :**

நம்பாடுவான் கோயிலுக்கு வெளியே நின்று, இசைத்துத் தொண்டு செய்த திவ்ய தேசம். கைசிக ஏகாதசி சமயத்தில், நம்பாடுவான், பகவானைப் பாடித் தரிசிக்க வரும் வழியில் "ப்ரம்மராக்ஷஸ்" தடுத்து, தனக்கு உணவாக வேண்டும் என்று நம்பாடுவானைக் கேட்க, ஏகாதசி விரதத்தை முடித்து வருவதாக, பகவானையே சாட்சியாக வைத்து எம்பெருமான் கோயிலுக்குச் சென்றான். பகவானின் கருணையே கருணை. அங்கு துவஜஸ் தம்பம் விலகிக் கொண்டது. பகவானே நம்பாடு வானை நேராக அனுக்ரஹித்தார். நம்பாடுவான் சொன்ன சொல்லை காப்பாற்ற பிரம்மராக்ஷஸை நோக்கிச் சென்றபோது பகவானே, பிராம்மண உருவில் நம்பாடுவானை தடுக்கிறார். தான் யார் என்பதையும் உணர்த்துகிறார். இருந்தும் நம்பாடுவான், சொன்ன சொல்லை காப்பாற்ற பிரம்மராக்ஷஸ் முன்னாலே சென்று, அது கேட்டுக் கொண்டபடி அன்றைய புண்ணியத்தின் பாதியை கொடுக்க, அந்த பிரம்ம ராக்ஷஸ் அந்த புண்ணியத் தால் ராக்ஷஸ உருவம் நீங்கி பகவானை அடைந்த தாகவும், நம்பாடுவானும் அப்படியே பகவானை அடைந்ததாகவும் கூறுவர்.

இது நாடக ரூபமாக கைசிக ஏகாதசி அன்று இரவில் நடைபெறுகிறது. இந்த இடத்திலிருந்து யமப்பட்டிணம் கூப்பிடும் தூரத்தில் உள்ளதாக ஐதீகம். நம்பாடுவான் சரித்திரம் இங்குதான் நடந் தது. இதையொட்டி கைசிக புராணம் என்கிற வர லாறு ஒவ்வொரு கார்த்திகை மாத கைசிக துவாதசி யில் திவ்ய தேசங்களில் வாசிக்கப்படுகிறது.

ஸ்ரீஉடையவர், திவ்யதேசம் தோறும் சென்று சந்நிதி ஆராதனங்களை அந்தந்த ஆகம முறைப்படி நெறிப்படுத்தியது, குருபரம்பரை வரலாறு. இப்படிச் செய்யும்போது, பாண்டிய நாட்டு திருப்பதிகளிலும் ஒழுங்குப்படுத்தினார். மலை நாட்டில் திருவனந்த புரம் சென்று சந்நிதி வழக்கங்களை நெறிப்படுத்த திருவுள்ளம் கொண்டார். இதை அறிந்தனர்

திருவனந்தபுரத்து எம்பெருமானுக்கு வழிவழியாக கைங்கர்யம் செய்யும் நம்பூதிரி பிராம்மணர்கள். அவர்கள், அனந்த பத்மநாபனை வேண்டிக் கொண்டார்கள். தாங்கள் தலைமுறை தலைமுறையாகச் செய்யும் வழிபாட்டு முறையே நீடிக்க வேண்டும் என்று அவரைப் பிரார்த்தித்தார்கள். அனந்த பத்மநாபன், அடியார் வேண்டுகோளை நிறைவேற்றத் திருவுள்ளம் கொண்டான். நன்கு தூக்கத்தில் இருந்த ஸ்ரீராமாநுஜரை இரவோடு இரவாக திருக்குறுங்குடியில் கொண்டுபோய் விடுமாறு கருடனுக்குக் கட்டளையிட்டார்.

திருக்குறுங்குடியில் கண் விழித்தார் ஸ்ரீஉடையவர். இது, அந்த எம்பெருமானின் திருவிளையாடலே எனப் புரிந்துக் கொண்டார். திருவனந்தபுரத்தில், ஸ்ரீராமாநுஜரின் சிஷ்யர் வடுக நம்பி, தன்னுடைய ஆசார்யரைத் தேட, இங்கு திருக்குறுங்குடியில் ஸ்ரீஉடையவர், தன் சிஷ்யனான வடுக நம்பியைத் தேட, திருக்குறுங்குடி நம்பி எம்பெருமான் தானே வடுக நம்பியாக உருவெடுத்து, ஸ்ரீஉடையவருக்குத் தொண்டு செய்தார். எழுதும்போதே மெய் சிலிர்க்கிறது. படிக்கும் உங்களுக்கும் இந்த அநுபவம் நிச்சயம் ஏற்படும். பகவான் வாமன த்ரிவிக்ரம அவதாரம் எடுத்த சமயம், ஆகாயத்தை நோக்கிச் சென்ற திருவடியிலிருந்து சிலம்பாறு தோன்றியதாக வரலாறு.

### சிறப்புகள்

எல்லா திவ்ய தேசங்களையும் மங்களாசாசனம் செய்த திருமங்கையாழ்வார், திருவரங்கச் செல்வனிடம் பரமபதம் வேண்ட, பெரிய பெருமாள் ஆழ்வாரை பரமபதம் வேண்டினால், திருக்குறுங்குடிக்குப் போவாயாக என்று இங்கு அனுப்பினாராம்.

திருமங்கை ஆழ்வார் தன்னுடைய இறுதி மங்களாசாசனத்தை இங்கு வந்து செய்து, இந்த திவ்ய தேசத்து எம்பெருமானைத் துதித்து பரமபதம் எய்தினார். இவரது பிருந்தாவனம் திருமங்கை ஆழ்வார் திருவரசு என்று – இவரது சரம திருமேனி பள்ளிப்படுத்திய புண்ணியபூமி இங்கு உள்ளது. தினந் தோறும் எண்ணற்றவர்களால் பூஜிக்கப்படுகிறது.

### இன்னொன்று

திருமங்கை ஆழ்வாருக்குப் பெரிய பெருமாள் திருமந்திரத்தை உபதேசித்தார். அதைப் போலவே திருநறையூர் நம்பியும் உபதேசித்தார். இங்கு, இவ்வூர் எம்பெருமான் திருக்குறுங்குடி நம்பி, வைணவ லக்ஷணங்கள் பொருந்திய சிஷ்யனாக, ஸ்ரீராமாநுஜர் முன்பு பணிவுடன் நின்று அவரால் திருமந்திர உபதேசம் செய்விக்கப்படுகிறார்.

அதனால், எம்பெருமான் ஸ்ரீவைஷ்ணவ நம்பி ஆகிறார். ஆஹா! என்ன ஏற்றம்! இதனை மெய்ப்பிக்கும் வகையில் இந்தப் புனித இடம் திருவட்டப் பாறை என்று இன்றும் போற்றப்படுகிறது. இந்தப் பாறையில் தான் உடையவர் எழுந்தருளி, இருந்த போது, வடுக நம்பியாக வந்த திருக்குறுங்குடி நம்பி உடையவரின் பரிவட்டங்களைத் துவைத்துக் கைங்கர்யம் செய்தான்.

## சாஸ்த்திர நீதிகள்–86

வஸ்த்ர முக்யோ ஹ்யலங்கார: ப்ரியமுக்யம் து போஜனம் |
குண முக்யாபவேன் நாரீ வித்யா முக்யஸ்து ப்ராம்மண: ||

1. அந்தணர் வேதம், சாத்திரங்கள் படிப்பதும் அதன்படி நடப்பதும் அவசியம்.
2. அலங்காரம் செய்துக் கொள்ள துணிமணிகள் அவசியம்.
3. உணவு பரிமாறுபவர், அன்புடன் பேசி, உண்பவர் மனதை புண்படாதவாறு உபசாரம் செய்வது அவசியம்.
4. பெண்கள் நல்ல குணம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம்.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



ஸ்ரீஉடையவரின் ஆசார்யர்களில் ஒருவர், பெரிய நம்பிகள். இவரது வம்சத்தவரே, இங்கு, திருக்குறுங்குடியில் ஜீயர்களாக இருந்து, மகத்தான கைங்கர்யங்களை வழிவழியாகச் செய்து வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| பெருமாள், மூலவர் | : | நின்ற நம்பி, குறுங்குடி நம்பி, இருந்த நம்பி, வடுக நம்பி, வைஷ்ணவ நம்பி, கிடந்த நம்பி, மலைமேல் நம்பி, திருப்பாற்கடல் நம்பி (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்). |
| உத்ஸவர் | : | சுந்தர பரிபூரணர் வடிவழகிய நம்பி. |
| தாயார் | : | குறுங்குடிவல்லி நாச்சியார் (இருதனிக்கோயில்களில் நாச்சியார்) |
| புஷ்கரணி | : | அஞ்சன புஷ்கரணி |
| விமாநம் | : | பஞ்சகேதக விமாநம், பஞ்ச க்ரஹ விமானம். |
| தீர்த்தம் | : | திருப்பாற்கடல் பஞ்சத் துறை, சிந்து நதி. |
| ப்ரத்யக்ஷம் | : | பக்கம் நின்ற பரமசிவன் கஜேந்திரன். |
| ஆகமம் | : | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார், திருமழிசை ஆழ்வார், பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம் :**

நின்ற நம்பி, கிடந்த நம்பி சன்னதிகளுக்கு இடையில் சிவனின் சன்னதி உள்ளது. பிரம்மாவின் தலையை இவர் கிள்ளியதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் இத்தலத்தில் நீங்கியதாகச் சொல்வர். திருக்குறுங்குடி நம்பியே நம்மாழ்வாராக அவதாரம் செய்ததால், நம்மாழ்வார் சன்னதி இல்லை.

ஸ்ரீஉடையவர், பெரிதும் உகந்த திவ்ய தேசம். இவ்வெம்பெருமான் கண்ணகத்தும் மனத்தும் அகலாக் கொற்றவன்.

**த்யானச்லோகம் :**

*"ஸ்ரீமத் க்யாத குரங்க நகரே திஷ்டந் ஸ்வபந் ஸஞ்சரந்,*
*ஆஸீநச்ச தராதராக்ர விலஸத் தேவஸ்ஸ பூர்ணாஹ்வய: ।*
*தாத்ருங் மந்திர நாயிகாஞ்சந ஸரஸ் தீர்த்தம் சபஞ்சக்ரஹா*
*க்யாதம் தத்ர விமாந மீசகஜ யோஸ் ஸாக்ஷாத் க்ருத: ப்ராங் முக: ॥"*

**பாசுரம்**

*"இறும் கடுவினைகள், தூய இன்பம் மெய்ஞ்ஞானம் எல்லாம்*
*உறும் குடியடியராய், உற்றுநீர் தொழுமின் என்றே*
*நறுங்கொடி மலரோன் நாளும் நவில நாரதனார்*
*ஏத்தக் குறுங்குடி மேவி நின்ற கோவிந்தநம்பி வாழி"*

– வரதராச பாகவதம்

*"நம்பியைத் தென்குறுங்குடிநின்ற அச்*
*சொம்பொ னேதிகழும் திருமூர்த்தியை*
*உம்பர்வானவர் ஆதியஞ்சோதியை*
*எம்பிரானை யென்சொல்லி மறப்பனோ?"*

– நம்மாழ்வார்

*"கரண்டம் ஆடு பொய்கையுள் கரும்பனைப் பெரும் பழம்*
*புரண்டு வீழ வாளைபாய் குறுங்குடி நெடுந்தகாய்!*
*திரண்ட தோள் இரணியன் சினம் கொள் ஆகம் ஒன்றையும்*
*இரண்டு கூறு செய்து உகந்த சிங்கம் என்பது உன்னையே"*

– திருமழிசையாழ்வார்

*"உன்னையும் ஒக்கலையில் கொண்டு தம் இல் மருவி*
*உன்னொடு தங்கள் கருத்தாயின செய்து வரும்*
*கன்னியரும் மகிழக் கண்டவர் கண்குளிரக்*
*கற்றவர் தெற்றிவரப் பெற்ற எனக்கு அருளி*
*மன்னு குறுங்குடியாய்! வெள்ளறையாய்! மதிள் சூழ்*
*சோலை மலைக்கு அரசே! கண்ணபுரத்து அமுதே!*
*என் அவலம் களைவாய்! ஆடுக செங்கீரை*
*ஏழு உலகம் உடையாய்! ஆடுக ஆடுகவே!"*

– பெரியாழ்வார்

''வாழக்கண்டோம் வந்து காண்மின் தொண்டீர்காள்!
கேழல் செங்கண் மாமுகில் வண்ணர் மருவும் ஊர்
ஏழைச் செங்கால் இன்துணை நாரைக்கு இரைதேடி
கூழைப்பார்வைக் கார்வயல் மேயும் குறுங்குடியே''

– திருமங்கை ஆழ்வார்

''தாலத்து இழி குலத்துச் சண்டாளம் ஆனாலும்
மேலத்தவர் அதனில் மேன்மைத்தே - கோலக்
குறுங்குடி வாழ் மாயன்குரை கழற்கு ஆளாகப்
பெறும் குடியாய் வாழ்வோர் பிறப்பு''

– பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்

### நாமாக்கள்

501. ஓம் சரீரபூத ப்ருத் நம:
(தனக்குச் சரீரமாக சகல பூதங்களையும் தாங்குபவனே)
ஓம் விஷ்ணு துர்காயை நம:
(எல்லாவற்றிலும் உட்புகுந்து நியமித்தாலும், பிறரால் உணர முடியாதவளே)

502. ஓம் போக்தா நம:
(ஹவ்யகவ்யங்களைப் புசிப்பவனே)
ஓம் மஹா பலாயை நம:
(உலகம், அனைத்தையும் தாங்கும் பலம் உள்ளவளே)

503. ஓம் கபீந்த்ர நம:
(வானர உருவத்திலிருந்த தேவர்களுக்குத் தலைவனே)
ஓம் மத்யந்த்யை நம:
(ப்ரம்மானந்தத்தை அளித்து அடியார்களை, ஸாமகாநாதிகளைச் செய்யும்படி மதமுள்ளவர்களாக ஆக்குபவளே)

504. ஓம் பூரிதக்ஷிண நம:
(பல யாகங்களை நடத்தி அதற்கான அதிகமான தக்ஷிணை அளித்தவனே)
ஓம் லோகதாரிண்யை நம:
(உலகங்களைத் தரிப்பவளே)

505. ஓம் ஸோமப: நம:
(யாகத்தில் ஸோமபானம் செய்பவனே)
ஓம் அத்ருஸ்யாயை நம:
(தாம் தாங்கும் உலகங்கள் தம்மை அறியாதபடி அந்தர்யாமியாக இருப்பவளே)

506. ஓம் அம்ருதப நம:
(அம்ருதத்தைப் பருகுபவனே)
ஓம் ஸர்வநிஷ்க்ருத்யை நம:
(எல்லாப் பாபங்களுக்கும் பிராயச்சித்தம் போல இருந்து அவற்றைப் போக்குபவளே)

507. ஓம் ஸோம நம:
(பக்தர்களுக்குத் தானே அம்ருதமாக இருப்பவனே)
ஓம் தேவஸேநாயை நம:
(தெய்வீக குணங்கள் உடையவர்களைப் படை போல இருந்து ரக்ஷிப்பவளே)

508. ஓம் புருஜித் நம:
(பலரை வென்றவனே)
ஓம் ஆத்மபலதாயை நம:
(பெருமாளையே நமக்கு அளித்து, அவரைத் தியானிக்கும் பலத்தையும் கொடுப்பவளே)

509. ஓம் புருஸத்தம: நம:
(தன் பக்தர்களிடம் என்றென்றும், இருப்பவனே)
ஓம் வஸுதாயை நம:
(அனைவருக்கும் ஜீவன சாதனங்களை ஏற்படுத்துபவளே)

510. ஓம் விநய நம:
(தீயவரைத் தன் பராக்ரமத்தால் வணங்கும்படி செய்பவனே)
ஓம் முக்ய மாத்ருகாயை நம:
(பதிவ்ரத தர்மங்கட்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இருப்பவளே)

ஸ்ரீமதே வாமந க்ஷேத்ரவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீவாமந க்ஷேத்ர பூர்ணாய, ஸ்ரீவைஷ்ணவ பூர்ணாய, த்ரிவிக்ரம பூர்ணாய, ஆஸின ஸ்ரீதர பூர்ணாய, ஸ்ரீ, பூ, ஸமேத பத்மநாப பூர்ணாய பார்ஸ்வே, பர்வநே ஹ்ருஷீகேச பூர்ணாய பரப்ரஹ்மணே நம:

குறிப்பு : திருநெல்வேலி – நாங்குநேரி பேருந்து மார்க்கத்தில் உள்ளது. நாங்குநேரியில் இருந்து சுமார் 13 கி.மீ. ஊருக்கு மேற்கே மலையில் மலை மேல் நின்ற நம்பி சுமார் 10 கி.மீ. தொலைவு. வனத்துறை அனுமதியுடன் செல்ல வேண்டும். திருப்பாற்கடல் தீர்த்தக்கரையில் திருப்பாற்கடல் நம்பி வட்டப் பாறையில் ஸ்ரீஉடையவர் சன்னதி அமைந்துள்ளது


திவ்ய தேச வைபவம் வளரும்...



அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின்
அருளிச்செயல்–11

# பெற்றோர்களுக்கும் பெண்ணுக்கும் ஆறுதல் சொல்லும் மந்திரங்கள்

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963



கன்னிகாதானம் முடிந்தவுடன் அடுத்த நிகழ்வாக மதுபர்க்கம் எனும் நிகழ்வு நடக்கிறது. தயிர், தேன் கலந்தது மதுபர்க்கம். இவற்றுடன் நெய்யைக் கலப்பதும் உண்டு. அப்பொழுது சில மந்திரங்கள் சொல்லப்படும் அந்தப் பெண் புகுந்த வீட்டில் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்த மந்திரங்கள் அவை.

அவள் புகுந்த வீட்டில் உள்ள கணவன், கணவனின்தம்பி அல்லது கூடப்பிறந்தவர்கள், கணவனின் பெற்றோர்கள் இவர்களையெல்லாம் பராமரிக்கின்றாள். அப்பணிகளை அன்போடு செய்பவளாக இருக்க வேண்டும். தேவதைகளை ஆராதிப்பதில் விருப்பம் உள்ளவளாக இருக்க வேண்டும். வீட்டில் இருக்கக்கூடிய இரண்டு கால் பிராணிகள், ஆடு மாடு போன்ற நான்கு கால் பிராணிகளுக்கு நலம் விளைவிப்பவளாக இருக்க வேண்டும் என்பதெல்லாம் அந்த மந்திரத்தில் இருக்கக் கூடிய விஷயங்கள்.

அதாவது மொத்தத்தில் ஒவ்வொரு மனிதர்களிடமும் நேர்மறை எண்ணங்களும் எதிர்மறை எண்ணங்களும் உண்டு. இந்த திருமண பந்தத்தில் எதிர்மறை எண்ணங்களை எல்லாம் நீக்கிக் கொள்வதற்கான மந்திரப் பிரயோகங்கள் தான் ஆபஸ்தம்பர் சொல்லியிருக்கின்றார். இன்னொரு விஷயமும் இங்கே உண்டு. மணமகள் பிறந்த வீட்டில் செல்லமாக வளர்ந்தவள். அவள் முன் பின் அறிமுகமில்லாத ஒரு புதிய வீட்டிலே மருமகளாகப் புகுகின்றாள். தான் இதுவரை வளர்ந்த வீட்டிலிருந்து பிரிந்து போவதால் அவளுக்கு வருத்தம் ஏற்படும். அதைப் போலவே அவளைப் பெற்ற பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் இந்தப் பிரிவானது வருத்தத்தை ஏற்படுத்தவே செய் யும். இது உலக இயல்பு. இந்த உளவியலை கருத்தில் கொண்டு வேத மந்திரங்கள் அமைந்திருப்பதையும், அது திருமணங்களில் பிரயோகம் செய்யப்படுவதையும் பார்த்தால், இந்த திருமண சம்ஸ்காரத்தில் இருக்கக்கூடிய நடைமுறைகள் எத்தனை சீர்மை உடையதாக இருக்கின்றன என்பதை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

பொதுவாக புகுந்த வீட்டுக்கு வந்த பெண் எதற்காகவும் கண்ணீர் விடக் கூடாது. அப்படி கண்ணீர் விட்டால் அதுவும் ஓர் அமங்கலமாகக் கருதப்படுகின்றது. அந்த அமங்கலத்தை நீக்கிக் கொள்வதற்கு இந்த மந்திரம் அங்கே ஓதப்படுகிறது.

பெண்ணின் பிரிவினால் வருந்துகின்றவர்களுக்கு ஆறுதல் கூறும் மந்திரம் சொல்லும் செய்தி இதுதான்.

கணவனின் இல்லத்திற்குப் போகும் இந்தப் பெண்ணின் பிரிவினைப்பொறுத்துக் கொள்ள இயலாத நிலையில் இருக்கக் கூடிய பந்துகளைப் பார்த்து, “இதோ பாருங்கள். அவள் அழகான வாழ்க்கையை அடைந்து இருக்கிறாள். அவள் உங்களைப் பிரிந்து இருப்பது அவருடைய நல்ல வாழ்க்கைக்காக. அப்படி அவள் இருக்கின்ற



## தாம்பூலம்

சுபகாரியங்கள் நடந்து முடியும் போது தாம்பூலம் எடுத்துக் கொள்வது நமது பாரம்பரிய வழக்கம். முக்கியமாக தாம்பூலம் தரிக்கும் போது வெற்றிலை நன்கு கழுவி, துடைத்து அதனுடைய காம்பு, நுனி, நரம்பு இவைகளை நீக்கி விட்டு, பின் சுண்ணாம்பு தடவி, பாக்குடன் வாயில் போட்டுக் கொள்வது வழக்கம்.

வெற்றிலையின் நுனியில் பாவம் இருக்கிறது. காம்பில் நோய் உள்ளது. நரம்பில் புத்திக்குறைவு இருப்பதாக பெரியோர்கள் நமக்கு சொல்லித் தந்திருக்கிறார்கள். அதனால் தான் அம்மூன்றையும் தவிர்க்க வேண்டும். சுண்ணாம்பு தடவாமல் வெறும் வெற்றிலையையோ, பாக்கையோ வாயில் போட்டுக் கொள்ளக் கூடாது. மனைவிக்கு மட்டும் தான் உரிமையுடன் வெற்றிலை மடித்து கணவனுக்கு தருகிற பழக்கம் உள்ளது. கணவன் மனைவிக்கு மடித்துத் தரக்கூடாது. அதே போல் மகன் தாய்க்கும், மகன் தந்தைக்கும் மடித்துத் தரக்கூடாது என்பது ஐதீகம்.

பொழுது நீங்கள் துன்பப்படுவது சரியா? இது எத்தனை சந்தோஷமான காலம். எனவே நீங்கள் துக்கத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள். இந்த தம்பதிகளுக்கு நீண்ட கால ஆயுளையும் அன்பு பிணைப்பையும் வேண்டிக் கொள்ளுங்கள். இந்த இருவர் சேர்ந்து வாழும் வாழ்க்கையிலே பிறக்கும் குழந்தைகளால், உங்கள் இருவர் குடும்பத்தின் முன்னோர்களுக்கும் சந்தோசம் தரும். அவர்கள் உய்வடைவார்கள். உங்களுக்கும் உங்கள் உறவினர்களுக்கும் இவள் வாழுகின்ற வாழ்க்கை பெருமை உடையதாக இருக்கும்.

ஜனகனுக்கு பெண்ணாகப் பிறந்த சீதா தேவி, தசரதனின் இல்லத்திற்கு வந்த பிறகு, திரும்ப பிறந்த வீட்டிற்குச் சென்றதாக இராமாயணத்தில் இல்லை. ஆயினும், இராமன் அவளை அழைக்கின்றபோது அன்போடு அவள் பிறந்த நகரத்தின் பெயரைச் சொல்லி மைதிலி என்றே அழைக்கின்றான். மைதிலி தன்னை வளர்த்த ஜனகனுக்கு மிகப் பெரிய பெருமையை தருகின்றாள்.



பெரியாழ்வார், தாய் பாவத்தில், புகுந்த வீடு செல்லும் ஒரு பெண்ணை குறித்துப் பாடுகின்றார். பெண் கண்ணனை கல்யாணம் செய்து கொண்டு யசோதை வீட்டுக்குப் போகும்போது அப்பெண்ணின் பிரிவைத் தாங்காது பாடும் பாசுரம் இது.

*ஒரு மகள் தன்னை உடையேன் உலகம்*
*நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங்*
*கண் மால் தான் கொண்டு போனான் பெரு*
*மகளாய்க் குடி வாழ்ந்து பெரும் பிள்ளை பெற்ற*
*அசோதை மரு மகளைக் கண்டு உகந்து மணாட்டுப்*
*புறம் செய்யுங் கொல்லோ?"*

அரிய நோன்புகளை நோற்று, எனக்குப் பிறந்த பெண் இவள். இப்படிப்பட்ட பெண் பிள்ளையைப் பெற்ற நான். இவளை "காவியங்கண்ணியெண்ணில் கடிமாமலர்ப் பாவையொப்பாள்" என்றபடி "நீங்கள் மஹாலக்ஷ்மியை பெண் குழந்தையாக அடைந்திருக்கிறீர்கள்" என்று உலகத்தாரெல்லாரும் புகழும்படி வளர்த்தேன்.

இப்படி வளர்ந்த இவளை, எம்பெருமான் தானே நேரில் வந்து கைக்கொண்டு போனான். போகட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், போன விடத்தில் இவளுக்கு மாமியா

ரான யசோதைப் பிராட்டி இவளுடைய அழகையும், குணங்களையும் கண்டு "பெறாப் பேறு பெற்றோம்" என மகிழ்ந்து, கல்யாணப் பெண்ணுக்குச் செய்ய வேண்டிய சீர்மைகளைக் குறையறச் செய்வாளோ? அல்லது ஒன்றும் கவனிக்காமல் விட்டு விடுவாளோ என்று துன்பப் படுகிறார்.

இது தான் பெண்ணை பெற்றவர்கள் நிலை. அதற்கு ஆறுதலான மந்திரங்கள் திருமண வைபவத்தில் உண்டு? கூரத்தாழ்வான் திரு நாட்டுக்கெழுந்தருளும் போது, எம்பெருமானார் இப்பாட்டைச் சொல்லிக் கதறி அழுதார் என்ற ஐதீகமுண்டு. சங்க இலக்கியமான நற்றிணையில் இதை போன்றதொரு பாடல் உண்டு.

*"ஒரு மகள் உடையேன் மன்னே, அவளும்*
*செரு மிகு மொய்ம்பின் கூர் வேல் காளையொடு*
*பெருமலை அருஞ்சுரம் நெருநல் சென்றனள்*
*இனியே, "தாங்கு நின் அவலம்" என்றீர் அது மற்று*
*யாங்ஙனம் ஒல்லுமோ, அறிவுடையீரே?*
*உள்ளின் உள்ளம் வேமே, உண்கண்*
*மணி வாழ் பாவை நடை கற்றன்ன என்*
*அணி இயற் குறுமகள் ஆடிய*
*மணி ஏர் நொச்சியும் தெற்றியும் கண்டே"*

பெண்ணின் தாய் பேசுவதாக இப்பாடலின் அமைப்பு இருக்கிறது. "அம்மா எனக்கு இவள் ஒரே ஒரு மகள். அவள் ஒரு அழகான ஆண் மகனை மணந்து கொண்டு சென்று விட்டாள். அவளைப் பிரிந்து நான் இப்பொழுது துடித்துக் கொண்டிருக்கிறேன். அவளை நான் எப்படி எல்லாம் வளர்த்தேன் தெரியுமா?

என்னுடைய கண்ணின் பாவை போல, அவளை செல்லமாக வளர்த்தேன். இதோ இந்த தோட்டத்தில் மரங்களின் இடையில் தான் அந்த சின்னப் பெண் ஆடுவாள் பாடுவாள். அதையெல்லாம் நான் ரசித்துக் கொண் டிருந்தேன். இப்பொழுது என்னைப் பிரிந்து அவள் திருமணம் செய்து கொண்டு வேறு வீட்டிற்குச் சென்று விட்டாள். இது காதல் மணம் குறித்த பாடலாக இருந்தாலும் கூட பெண்ணைப் பெற்றவர்களுடைய மனது எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகவே இருக்கும் என்பதினால் திருமணத்தில் அதற்குரிய ஆறுதல் மந்திரங்களால் கன்னியா தானம் செய்த பிறகு ஓதப்படுகிறது. மேலும் திருமண வைபவத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

அருளிச்செயல் தொடரும்...

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத்துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

**ஸ்ரீரங்க நாச்சியார் வாழித்திருநாமம்...**

ஸ்ரீரங்க நாச்சியார் பங்குனி உத்திர நக்ஷத்ரத்தில் அவதரித்தார்.

*பங்கயப் பூவில் பிறந்த பாவை நல்லாள் வாழியே*
*பங்குனியில் உத்திர நாள் பாருதித்தாள் வாழியே*
*மங்கையர்கள் திலதமென வந்த செல்வி வாழியே*
*மாலரங்கர் மணிமார்பை மன்னுமவள் வாழியே*
*எங்கள் எழில் சேனைமன்னர்க்கு இதமுரைத்தாள் வாழியே*
*இருபத்தஞ்சுபொருள் மால் இயம்புமவள் வாழியே*
*செங்கமலச்செய்ய அரங்கம் செழிக்க வந்தாள் வாழியே*
*சீரங்க நாயகியார் திருவடிகள் வாழியே.*

**பதவுரை**

பங்கயப்பூவில் பிறந்த – தாமரைப்பூவில், பிறந்த– அவதரித்த, பாவை நல்லாள் – சிறந்த பெண்ணான பெரிய பிராட்டியார் வாழியே – வாழ வேண்டும். பங்குனியில் – பங்குனி மாதத்தில், உத்திர நாள் – உத்திர நக்ஷத்ரத்தில், பாருதித்தாள் – இவ் வுலகில் அவதரித்தாள்; மங்கையர்கள் – பெண்களுக்குள், திலதமென – திலகம் என்று சிறப்பாகக் கொண் டாடப்பட்டு, வந்த செல்வி – தோன்றின பிராட்டி; மால் அரங்கர் – பெருமை பொருந்திய திருவரங்கர், மணிமார்பை – அழகான மார்பை, மன்னுமவள் – பொருந்தி இருப்பவள்; எங்கள் எழில் – எங்கள் அழகான, மன்னர் – தலைவரான, சேனை மன்னர்க்கு – சேனை முதலியாருக்கு, இதம் – நன்மை, உரைத்தாள் – சொன்னவள்; இருபத்தஞ்சு பொருள் – இருபத்தி ஐந்து எழுத்து கொண்ட துவயப் பொருளை, மால் – பெருமையுடன், இயம்புமவள் – உபதேசம் செய்தவள்; செங்கமலம் – சிவந்த தாமரை போன்ற, செய்ய அரங்கம் – அழகான திருவரங்கம், செழிக்க வந்தாள் – வளர்ச்சி பெற வந்தவள்; சீரங்க நாயகியார் – திருவரங்கத்துத் தலைவியான ஸ்ரீரங்க நாச்சியார், திருவடிகள் – அழகான திருவடிகள், வாழியே – பல்லாண்டு வாழ வேண்டும்.

(சிறப்புரை) (பங்கயப்பூவில் பிறந்த பாவை நல்லாள்) பங்கயம் – “பங்கஜம்” என்ற வடசொல் “பங்கயம்” ஆயிற்று. “பங்க” வடமொழியில் சேறு என்று பொருள். சேற்றில் தோன்றுவது – தாமரைப் பூ. பங்கயப்பூ – தாமரைப்பூ. பாவை – பதுமை, அழகிய உருவம். கருவிழி, பெண், நல்லாள் – குணத்தில் சிறந்த பெண். தக்கவள். பனி மலராள் – குளிர்ந்த தாமரைப் பூவை பிறப்பிடமாக உடையவள்.





பாவை – நாணம், மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் பெண்மை குணங்கள் நிறைந்த பெரிய பிராட்டியார். *''அரவிந்தப் பாவை''* (பெரியா. திரு.5–2–10) என்று பெரியாழ்வார் அருளியதற்கு ஏற்ப செந்தாமரை மலரைப் பிறப்பிடமாக உடைய பிராட்டி என்றும், எல்லையற்ற அழகையுடையவளாய் இயற்கையான பெண்மையை உடையவள் என்றும் உரைப்பர் மாமுனிகள். *''பாவை பனி மலராள்'* (பெரிய. திரு.2.2.9) என்று திருமங்கையாழ்வார் அருளியது காண்க.

(பங்குனியில் உத்திர நாள் பாருதித்தாள்) – பங்குனி தமிழ் மாதங்களில் 12 வது மாதம். உத்திரம் – 12 வது நக்ஷத்ரம். *''பால்கு நோத்தர பல்குந்யாம் ஸம் பூதாம் ச்ரியமாச்ரயே। விஷ்ணோர் திவ்ய பதாம்போஜ கடகாம் தத் பதாச்ரிதாம்॥''* என்கிற தனியன்படியே ஸ்ரீரங்கநாச்சியாரான பெரிய பிராட்டியார் பங்குனி மாதம் உத்திர நக்ஷத்திரத்தில் அவதரித்தாள் என்றும், அவள் எம்பெருமானுடைய திருவடியில் சேதனர்களைச் சேர்த்து வைப்பவள் என்றும் அறியப்படுகிறது. ஸ்ரீப்ரச்ன ஸம்ஹிதையில் பெரிய பிராட்டியார் அவதாரம் பற்றி சொல்லும் போது *''பால்குனே மாஸி நக்ஷத்ரே உத்தரே பூர்ணிமாதிதௌ''* (33) என்கிற படியே திருப்பாற்கடல் கடையும்போது கடலரசன் கன்னியான பிராட்டியார் பங்குனி மாதம் உத்திர நக்ஷத்ரம் பௌர்ணமி அன்று தோன்றினாள் என்றது காண்க. பார் – பூமி. ஸ்ரீரங்க நாச்சியாரான பெரிய பிராட்டியார் பங்குனி மாதம் உத்திர நக்ஷத்ரத்தில் இப்பூமியில் அவதரித்தாள். பங்குனி உத்திர நாளுக்குச்சிறப்பாவது – தர்ம சாஸ்த்ரத்தில் ஒரு மஹாராணி பிறந்தநாளன்று வரம் வேண்டி வந்தவர்களுக்கு அவர்கள் கேட்பதைத் தப்பாமல் அவள் கொடுப்பாளாம். அந்த வகையில் எம்பெருமானார் இந்த உலக மக்கள் பிறவித் துயர் அகல ஸ்ரீரங்க நாதனின் பட்ட மஹிஷியான பெரிய பிராட்டியை வேண்டினார். அதாவது பிராட்டி பிறந்த நாளான பங்குனி உத்திரத்தன்று பிரதி வருடமும் ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீரங்க நாச்சியார் சேர்த்தி உண்டு. ஒரு (பங்குனி) உத்திரத் திருநாளிலே, பெருமாளும் நாச்சியாருமாகப் புறப்பட்டு ஒரே ஸிம்மாஸனத்தில் எழுந்தருளி இருக்கும்போது எம்பெருமானார் அந்த திவ்ய தம்பதியைத் திருவடி தொழ எழுந்தருளினார்.

அந்த சமயத்தில் மனத்தில் ஸம்ஸார மண்டல வாழ்க்கையில் பயம் விளைந்து திருவடிகளில் சரணம் புகுந்து மூன்று கத்யங்களை விண்ணப்பித்தார் என்று பெரியவாச்சான் பிள்ளை கத்யத்ரய வ்யாக்யான அவதாரிகையில் அருளியது காண்க. சரணாகதி கத்யத்தில் முதல் சூர்ணையில் பிராட்டி திருவடிகளிலே சரணம் புகுகி றார் எம்பெருமானார். இதனால் பங்குனி உத்திர திருநாள் சிறப்புற்றது. அன்று இருவருமான சேர்த்தியிலே பெரிய பெருமாள் வாழித் திருநாமமும் பெரிய பிராட்டியார் வாழித் திருநாமமும் சேவிப்பது வழக்கம்.

(மாலரங்கர் மணிமார்பை மன்னுமவள்) : "மால்" – மையல், கருமை, பெருமை இத்தன்மைகள் அனைத்தையும் அடியார்களிடம் காட்டுமவன் அரங்கன். இது பற்றியே "மாலரங்கர்" என்றபடி. ''மணி'' – ஸ்ரீ கௌஸ்துபம். அரங்கன் திருவரங்கத்திற்கு வரும் முன்னமேயே ஸ்ரீரங்க நாயகித் தாயார் எழுந்தருளி அரங்கன் அமர்ந்த பின் வெளிப்பட்டவள். *''மார்பை மன்னுமவள்''* – *''காசாந்யா த்வாம் ருதே தேவி''* என்ற விஷ்ணு புராண சுலோகத்தில் (1–9–122) இந்திர துதியில், ''பிராட்டியைத் தவிர வேறு யாராலும் எம்பெருமான் திருமேனியில் இருக்க முடியாது'' அந்த வகையில் ஸ்ரீரங்க மஹாத்மியத்தில் பிரமன் ஸ்ரீரங்க விமானத்தைச் சேவிக்கும் போது ஸ்ரீரங்கநாதனுடைய பரந்த திருமார்பில் கருணையே வடிவான ஸ்ரீரங்க நாச்சியாருக்கான இருப்பிடம் காணப்பட்டது (ஸ்ரீர. மஹா.4–15) என்றும் பிரமன் துதிப்பதும் காண்க.

*''இந்திராயா:''(ஸ்ரீகுணரத்ந)* என்று பட்டர் அருளியபடியே *''இந்ததீதி இந்திரா''* என்று கொண்டு எம்பெருமானுக்கும் ஈச்வரியாய்

அவனது மார்பில் ஏறியிருக்கையே பிராட்டியின் கண் உள்ள சிறந்த ஐச்வர்யம் என்பர். நம்மாழ்வாரும் பிராட்டி எம்பெருமான் மார்பில் மன்னி இருப்பதைக் கண்டு *''உன் திருமார் வத்து மாலை நங்கை''* என்கிறார். இதற்குச் சேர வாதிகேசரிசீயரும் பிராட்டி ஆனவள் *''அகலகில்லேன்''* என்று விரும்பும்படியான திருமார்புக்குப் பரபாகமாக இருப்பவள் என்கிறார்.

எம்பெருமான் திருமார்புக்கு அலங்காரமான மாலையாயிருப்பவள் என்பர் நஞ்சீயர். கேவலம் ஸம்பத்தியாயிருக்கையன்றிக்கே திருமார்புக்கு அலங்காரமுமாயிருக்கை என்றும் மார்வுக்கு அலங்காரம் அவள். அவளுக்கு அலங்காரம் மார்வு என்றும் நம்பிள்ளை சுவை பட உரைப்பர்.

*''அல்லி மாதரமரும் திருமார்பன் அரங்கன்''* (பெரிய திரு 5.4.10) என்பர் திருமங்கையாழ்வார். மேலும், *''மின்னொத்த நுண்மருங்குல் மெல்லியலைத் திருமார்பில் மன்னத்தான் வைத்து உகந்தான்''* (பெரிய திரு. 6.9.6) என்பதற்குச் சேர மின்னோடு ஒப்பான தாய் மிக நுண்ணியதான இடையை உடைய வளாய் ஸௌகுமார்யத்தை ஸ்வபாவமாக உடையவளான பெரிய பிராட்டியை அழகிய திருமார்பில் பொருந்தும் படி வைத்து உகந்தவன் என்று உரைப்பர்.

ஸ்ரீஸ்துதியில் *''வக்ஷ: பீடம் மதுவிஜயிநோ பூஷயந்தீம் ஸ்வகாந்த்யா''* (1) என்கிறபடியே தன் காந்தியினால் ஸ்ரீரங்கராஜனுடைய திருமார்பை அலங்கரித்துக் கொண்டிருப்பவள் என்பர். பட்டர் ஸ்ரீரங்கராஜ பூர்வ சதகத்தில், *''அநந்தபோகிந: உத்வாந்தம் சிந்தாமணி இவ''* (8)என்கிறபடியே ஆதிசேஷனுடைய மடியிலே கோக்கப்பட்ட சிந்தாமணி போன்றது போல இருப்பவர் என்றும், இந்த மணியானது பெரிய பிராட்டியாருடைய மார்பில் ஆபரணமாயிருக்கும்.

மேலும், அவள் திருமுலைத் தடத்திலே அழிந்தின மணியாக இருக்கும் என்பர். அப்படிப்பட்ட மணி மார்பை உடைய பெரிய பெருமாளுக்குப் பொருந்தினவள் என்றபடி.

வேதாந்த தேசிகரும் பகவத் த்யான ஸோபானத்தில் *''ஸ்ரீபதந்யாஸ தந்யம்... ஸ்ரீரங்கதாம்ந''* (6) என்று பிராட்டி திருவடியால் தீண்டும்படியான பாக்கியம் பெற்றது ஸ்ரீரங்க ராஜனுடைய திருமார்பு என்கிறார். *''தேன் பூத்த தாமரையாள் மார்பில் ஆட''* என்று அஷ்டப்ரபந்தத்தில் சீரங்கநாயகர் ஊசலில் (8) அருளியபடியே தேன் நிறைந்த செந்தாமரை மலரில் வாழ்கின்ற பெரிய பிராட்டியார் அரங்கன் மார்பில் அசையாது நிற்கிறாள் என்பர்.

திருமால் திருவுள்ளம் உவந்து வந்து எழுந்தருளிய இடமானது பற்றி "ரங்கம்" என்று அந்த விமானத்துக்குப் பெயர். "ரங்கம்" என்னும் வடசொல் "அகரம்" மொழி முதலாக வரப்பெற்று "அரங்கம்'' என்றாயிற்று. விமானத்தின் பெயரான இது ஆகு பெயராய் "திருவரங்கம்" என்று ஊருக்கு ஆயிற்று. திருமகளார் திருநர்த்தனம் செய்யும் இடமாயிருந்ததாலும் இப்பெயர் வந்தது எனலாம்.

வாழித்திருநாமம் வளரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 54க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | வி | ல் | லி | பு | த் | தூ | ர் | | | 2 தி |
| ரு | | 3 ஏ | | கை | ல் | த | ந் | ம | ழ | 4 கூ | ரு |
| 5 வ | ரா | க | ந | ர | சி | ம் | ம | ர் | | | ஆ |
| ல் | ர் | லை | 6 வே | வா | ம் | ம் | ர | 7 தா | வ | சா | 8 த |
| லி | யா | வ | தா | 9 து | ண | ஸ | | ரை | | | னூ |
| க் | ரி | ன் | ந் | | கோ | ன | 10 கா | ச் | ய | 11 ப | ர் |
| கே | சா | ன | த | து | ப | கா | ற் | | 12 தி | த் | ர் |
| ணி | ச் | ஜூ | தே | ந் | ம் | 13 வை | று | | ரு | ம | யூ |
| 14 கே | ரா | ர் | சி | 15 ஐ | 16 கு | | | | ம | னா | றை |
| ர | க் | 17 அ | க | ல் | வி | ள | க் | கு | ழி | ப | ந |
| ளா | 18 சு | | ன் | ம | 19 ரா | தி | ந் | 20 இ | சை | ன் | ரு |
| 21 தி | ரு | க் | கூ | ட | ல் | | | ல் | மா | ரு | 22 தி |

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்



தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா

தாஸ சாகித்யம்

## ஸ்ரீ புரந்தரதாசரின் கீர்த்தனைகளில் ஸ்ரீநிவாசர்


“தாசர் என்றால் புரந்தரதாசரே” என்று ஸ்ரீவியாசராயரால் புகழப்பட்டவர். ஜனகனின் சன்னிதானத்தில் பாடுபவரான நாரதரே இந்த புரந்தர தாசராக தரிசனமளித்தார் எனவும், ஸ்ரீஹரியின் அனுக்கிரகத்தால் ஸ்ரீநிவாச நாயகனாக நாமத்தை அடைந்த இவர் தம் நவகோடி ஆஸ்தியை சிறு துகளாக நினைத்து வாழ்ந்தார்.

குரு வியாசராயரால் புரந்தர விட்டலா என்ற பெயரை ஏற்று, அன்று முதல் பல புராண இதிகாசங்களின் உதவியால் 4,75,000 கீர்த்தனைகளை எழுதி, பாரததேசம் முழுவதுமாக உள்ள அனைத்து புண்ணிய தலங்களை தரிசித்து அங்குள்ள தெய்வங்களின் மீதும், நதிகளின் மீதும், ஸ்ரீமந்மத்வாச்சாரியார் மற்றும் அனைத்து குருக்களையும் துதித்து, பல்வேறு வேதாந்த விஷயங்களைப் பற்றி கன்னடத்தில் கீர்த்தனைகளாக இயற்றியுள்ளார்.

கர்நாடக சங்கீத பிதாமகராகப் புகழ் பெற்ற புரந்தர தாசரின் கீர்த்தனைகள்,பஜனையில் மட்டுமே பாடப்படாமல் தேசம் புகழும் கர்நாடக சங்கீதத்திலும் பாடி மகிழ்வதற்கு ஏற்றது. மேலும், நாட்டியத்திற்கும் அனுகூலமானது சிறந்த எளிய சொற்களாகவும், பாடுவதற்கு இனிமையாகவும் இக்கீர்த்தனைகள் அமைந்துள்ளன.

புரந்தரதாசரின் பக்தியைக் கண்டு, மெய் மறந்து பண்டரிநாதன், திருமலேசன் ஆகியோர் தாமே தரிசன பாக்கியத்தினை அருளினர். பரமபுருஷனே உம்மை வந்து அடைந்தார் என்று விஜயதாசர் இவரைப் புகழ்ந்தார். அவ்வாறே திருமலேசன் மலைமேல் ஒரு முறை இரவு நேரத்தில் பக்தனாக உருவெடுத்து தண்ணீரைக் கொடுத்ததாகவும், மற்றொரு முறை அப்பன்னா என்ற சீடன் உருவில் நெய்யைக் கொண்டு வந்து சமாராதனையில் பரிமாறியதாகவும், இவர்கள் எழுதிய கீர்த்தனைகளால் அறிய முடிகிறது.

*“நன்னவ நெந்து நா நீரு தாரெந்தரே....”*



என்ற பாடலில், சிறியவன் என்று அன்று தண்ணீர் கொண்டு வா என்ற அழைத்தவுடன், ஸ்ரீகிருஷ்ணா நீ தங்கச் சொம்பில் தண்ணீர் கொண்டு வந்து தந்தாய் அல்லவா,

*''அப்பன்னா பாகவதன் ரூபவு தானாகி''*

இப்பாடலில் பகவான் அப்பன்னா வடிவில் வந்து நெய்யை பரிமாறியதாகக் கூறப்பட்டுள்ளது. பக்த சுலபன், ஹரி தாசர் ஆகியோர் திருவேங்கடமுடையானை தம் வாழ்க்கையில் பல முறை தரிசித்து வந்தனர். ஆனால், புரந்தரதாசர் தம் கண்முன்னே திருமலை திருத்தலத்தையும், ஸ்ரீநிவாசரையும் நிலை நிறுத்தி தம் கீர்த்தனைகளால் ஒலிக்கச் செய்தார். புரந்தர தாசர் திருவேங்கடமுடையானைப் புகழ்ந்துப் பாடிய கீர்த்தனைகளில் மிகவும் புகழ் பெற்ற பாடல்களைக் காண்போம்.

*''தாசன்ன மாடிகோ என்ன ஸ்வாமி, சாவிராமந வெங்கடரமணா''* (நாதநாமக்ரிய), *''ஸ்ரீனிவாசா நீனே பாலிசோ ஸ்ரீதஜனபால''* (ஆனந்த பைரவி), *''பாரய்ய வேங்கடரமணா''* (சாவேரி), *''வேங்கடரமணா வேதாந்த நின்னய பாதா''* (அரபி), *''பந்து நிந்திஹா நோடி'' மத்யமாவதி தணிய நோடி தேனு* (காபி), *''திருப்பதி வெங்கடரமணா''* (கரஹாரப்ரிய) முதலியன ஆகும். மேலும், *ஸ்ரீநிவாசனின் ஒலியன கேளோ, க்ஞானோ பார்ஜனே மாடதலே, நானேனு மாடிதெனோ வேங்கடராய, கனனு கண்டென மனதலி களவள கொண்டேனே, வேங்கடராமணநே பாரோ.*

*''வேங்கடேஷா நின்ன நாமக்கெ'', ''தப்புகளெள்ள நீ நொப்பிகொள்ளோ'', ''நின்ன நெ நம்பிதே'', ''நீரஜனயன'', ''கண்டே, கண்டே ஸ்வாமியபேடி கொண்டே'', ''பங்கஜ முகிய ரெள்ளரு பந்து லக்ஷ்மி வெங்கடரமணக ஆருதி எத்திரே''* ஆகிய இக்கீர்த்தனைகள் அனைத்தையும் பக்தர்கள் சாம்பிரதாய சங்கீதங்களில் பாடி மகிழ்கின்றனர்.

மனதை மயக்கும் இக்கீர்த்தனைகளில் ஸ்ரீநிவாசனின் அழகு, பெருமை, தத்துவம் முதலியவைகள் அடங்கியுள்ளன. புரந்தர தாசர் திருமலைக்கு வந்து திருவேங்கடமுடையானை தரிசித்து மனதில் ஏற்பட்ட உணர்வுகளை கீர்த்தனைகளால் வருணித்துப் பாடினார்.

*''கண்டே கண்டே ஸ்வாமிய பேடிக் கொண்டே...''* என்ற பாடலில் கண்டேன்! கண்டேன்! ஸ்வாமியை வேண்டிக் கொண்டேன்! திருப்பதி திருவேங்கடமுடையானைக் கண்டேன். அனைவருக்கும் தம் அருளை வாரி வழங்கும் கருணைக் கடலைக் கண்டேன் என்றார்.

*''கோடி சூர்ய ப்ராக நெளிப...''*

என்ற பாடலில், தலைமேல் கோடி சூரிய பிரகாசமாக ஒளிக்கும் கிரீடம், இரு திருக் கரங்களில் சங்கு சக்கரங்களை தரித்து சகல தேவதைகளுக்கு தெய்வமாக விளங்கும் திருவேங்கடமுடையானின் திருவடிகளைக் கண்டேன்.

*''தப்பு காணிக்கே கப்பகளனு சமஸ்த''* என்ற பாடலில் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை





புரிந்து பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகளை ஏற்று பக்தர்களுக்கு பிரசாதத்தை வழங்கி அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் திருப்பதி திருவேங்கடமுடையானைக் கண்டேன்.

*''உரதி ஸ்ரீதேவியளகண்டெனு உன்னதத கௌஸ்துப கண்டேனு...''* ஸ்வாமியின் வக்ஷஸ் தலத்தில் பிரகாசிக்கும் கௌஸ்துப மணியையும், ஸ்ரீதேவியையும், இரு புறங்களின் முன்பாக உள்ள கருடர். கின்னரர், நாரதர் ஆகியோருடன் பக்தர்களையும் மற்றும் சேஷசயனனான "சேஷகிரிவாசனான புரந்தர விட்டலனான" திருவேங்கடமுடையானின் திருவடியைக் கண்டேன் என்றார்.

திருமலை, அம்மலையில் உள்ள ஆலயம், கருட ஸ்தம்பம், ஜெய, விஜயர், ஸ்வாமியின் திவ்ய மங்கள விக்ரகம், அந்த ஸ்வாமியின் அழகு சௌந்தர்யம், உத்சவங்கள், உத்ஸவ மூர்த்திகள் முதலியவற்றை தம் கண்முன்னே நிலைநிறுத்திப் பாடி மகிழ்வார். இத்தகைய கீர்த்தனைகள் மிகவும் சிறப்புடையன.

*"பந்து நிம்திஹ நோடி! பூதளதி வேங்கடா!"* இந்த பூலோகத்தின் மேல் லக்ஷ்மி தேவியுடன் திருவேங்கட முடையான் எழுந்தருளியுள்ளார். அவரை மனதார அடிபணிந்து பூஜித்து மகிழ்வோம்!

*''வந்திசுத மனதொளகே இவனடி...''* மனதில் ஸ்வாமியின் திருவடிகளை பூஜிப்பதால் "பயம்'' நம்மை விட்டு விலகிச் செல்லும். திருவேங்கடவனான கோவிந்தன் தயை மிக்கவன், ஸ்ரீஹரி என்று புகழ்ந்தார். *"த்வார தெடபலதல்லி, ஜெயவிஜயரிப்பரு..."* என்ற பாடலில் ஸ்வாமியின் பெருமைகள் கூறப் பட்டுள்ளன.

கர்ப்பாலயத்தின் முன் இருபுறமும் ஜெயவிஜயர் களால் துதிக்கப்பட்ட ஸ்ரீநிவாசர் முத்துமாலைகள், தங்க ஆபரணங்கள், குண்டலங்கள், புஜகிரீடங்கள், தலைக்கிரீடம் ஆகியவற்றை அணிந்து புன்னகையுடன் ஒளிமயமாகக் காட்சி தருகின்றார் என்று அழகாக கூறியுள்ளார்.

*''எல்லபகுதரபீஷ்ட! கொடுவுதகேதாகை...''* திருவேங்கடமுடையான் அனைத்து பக்தர்களின் கோரிக்கைகளை தீர்க்கும் வண்ணம் வைகுண்டத்தை விடுத்து இந்த சேஷாத்ரி மலையில் எழுந்தருளியவன் ஆவார்.

இவர் சௌபாக்கிய நிதி, இவரை எதிர்ப்பவர் யாரும் இலர், கஸ்தூரி திலகத்தை தரித்தவர், நீதியற்றவர்களை அழிப்பவர், கம்சத்வம்சன், தீயவற்றை அழித்து பக்தர்களுக்கு ஆனந்தத்தை அருள்பவர் என்றும் கூறுகிறார். **சாஹித்யம் வளரும்...**



**ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்-22**

*யோகரதோ வா போகரதோ வா*
*ஸங்கரதோ வா ஸங்கவிஹீன: ।*
*யஸ்ய ப்ரஹ்மணி ரமதே சித்தம் நந்ததி*
*நந்ததி நந்தத்யேவ ॥*

**உள்ளமும் உடலும் சுகம் பெறுவதற்காக பலர் "யோகம்" பழகுகிறார்கள். பலர் "போகத்தில்" ஈடுபடுகிறார்கள். இவை போன்ற அனுபவங்களில் பலரோடு சேர்ந்து இருந்தாலும், அல்லது தனித்து இருந்தாலும்... (சுகம் பெறுவதில்லை) யாருடைய மனது பிரம்மத்தில் மட்டுமே லயிக்கிறதோ... (ஒருவனேயான இறைவனை மட்டுமே நினைத்து அனுபவிக்கிறதோ) அவனே உண்மையான சுகத்தினை அடைகிறான்.**

**- திரு. சீதாராமன், சென்னை.**



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## चतुर्थः पाठः பாடம்-4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| एते | = இவர்கள் | अद्य | = இவ்வேளை | आसन् | = இருந்தனர் |
| के | = யார்? | एकदा | = ஒரு சமயம் | आस्त | = நீங்கள் இருந்தீர் |
| सर्वे | = அனைவரும் | सर्वदा | = எவ்வேளையும் | आस्म | = இருந்தோம் |

### வினாக்கள்

१. एते अद्य कुत्रासन्?
२. ते एकदा तत्रासन्।
३. यूयं सर्वदा अत्रास्त।
४. वयं कदा अत्रास्म?
५. तत्र के आसन्?
६. सर्वे तत्रासन्।
७. ते के?
८. वयं अद्य तत्र स्मः।
९. त्वम् अत्र नासीः।
१०. बत! अहम् अत्रासम्।

1. நீங்கள் யார்?
2. நாங்கள் இங்கு இருந்தோம்.
3. இவ்வேளை அவன் அங்கு இருக்கின்றான்.
4. நீ அங்கு இல்லையா?
5. நாங்கள் அனைவரும் அங்கு இருந்தோம்.
6. நீங்கள் அனைவரும் அங்கு இருந்தீர்களா?
7. யார் இவ்வேளை அங்கு இருக்கின்றனர்?
8. அவர்கள்,இவர்கள்,நாங்கள் அங்கு இருந்தோம்.
9. நீங்கள் எப்பொழுது அங்கு இருந்தீர்?
10. நாங்கள் இவ்வேளை அங்கு இருந்தோம்.

### விடைகள்

1. இவர்கள் இந்த நாள் எங்கு இருந்தனர்?
2. அவர்கள் ஒரு சமயம் அங்கு இருந்தனர்.
3. நீங்கள் எவ்வேளையும் இங்கு இருந்தீர்கள்.
4. நாங்கள் எப்பொழுது இங்கு இருந்தோம்?
5. அங்கு யார் இருந்தனர்?
6. எல்லோரும் அங்கு இருந்தனர்.
7. அவர்கள் யார்?
8. நாங்கள் இன்று அங்கு இருந்தோம்.
9. நீ இங்கு இல்லை.
10. ஐயோ! நான் இங்கு இருந்தேன்.

१. यूयं के?
२. वयं अत्र आस्म।
३. अद्य सः तत्रास्ति।
४. किं त्वं तत्र नासीः?
५. वयं सर्वे तत्र आस्म।
६. यूयं सर्वे किं तत्र आस्त?
७. के अद्य तत्र सन्ति?
८. ते, एते, वयं तत्र आस्म।
९. यूयं कदा तत्र आस्त?
१०. वयं अद्य तत्र आस्म।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி
தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா



# ஆயுர்வேதம்

# முத்தக்காசு




தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் :
திருமதி வி.உஷா, 99850 02156


நம் ஆரோக்கியத்தைக் காக்கும் பொருட்டு இயற்கை அன்னை சில உணவுப் பொருட்களை மருந்துப் பொருளாக வழங்கியுள்ளாள். அவ்வகையில் உபயோகப்படுத்தப்பட்ட பல மூலிகைகளில் ஒன்று முத்தக்காசு. இதனை கோரைக்கிழங்கு என்றும் கூறுவர். இது தற்போது பல்வேறு நோய்களுக்கு எவ்வாறு பயன்படுகிறது என்று அறிந்து கொள்வோம்.

முத்தக்காசு – இது ஓர் சிறிய செடியின் கிழங்கு. நெற்வயல்களில் களை எடுக்கும் தருணத்தில் அதிக மாக இச்செடிகளை சேகரிக்கலாம். சமஸ்கிருதத்தில் இதனை முஸ்தா என்பர். *''முஸ்வதி கண்டயதி ரோகான் முஸ்த:''* என்ற இவ்வாக்கியம் நோயை அழிப்பதால் முஸ்தா என்று அழைத்தனர். அவ்வாறே குளிர்ச்சியைத் தரும் குணம் கொண்டதால் “ஹிம” என்றும், வாசனை தருவதால் “சுகந்தி” என்றும், நீருடைய இடங்களில் வளர்வதால் “முஸ்த” என்கிற சமஸ்கிருத பெயரையும் அடைந்தது.

சைபரேசி என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்த இந்த செடியின் அறிவியல் பெயர் “சைபரஸ் ரொடென்டன்'' ஆகும். ஆங்கிலத்தில் “நட்க்ராஸ்'' என்றும், இந்தியில் “மோதா'' என்றும், தெலுங்கில் “துங்கமுஸ்தலு” என்றும் அழைப்பர்.

காய்ந்த முத்தக்காசு மற்றும் முத்தக்காய் பொடி வேறு சில மூலிகைகளுடன் கலந்து ஆயுர்வேத மருந்துக் கடைகளில் விற்கின்றனர்.

### உடலில் அதிக சூட்டைக் குறைக்க :

முத்தக்காசுப் பொடி, சுகந்தபாலப் பொடி, வெட்டிவேர் பொடி ஆகிய ஒவ்வொன்றையும் 10 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு, 30 கிராம் சர்க்கரை யுடன் கலந்து பாட்டிலில் வைத்துக் கொண்டு காலை, மாலை இருவேளை அரை டீ ஸ்பூன் முதல் ஒரு டீ ஸ்பூன் பொடியை 100 மி.லி. நீரில் கலந்து உட் கொண்டால் உடலின் அதிக சூடு குறையும். உடலில் சூடு அதிகமானால் கண் எரிச்சல், சிறு நீர் கழிக்கும் போது வலி, எரிச்சல் போன்ற உபாதைகள் வரும். இம்மருந்தை உட்கொள்வதால் குறையும். உடம் பிற்கு குளிர்ச்சியைத் தரும்.

சர்க்கரை வியாதி உள்ளவர்கள் இந்த மருந்தில் சர்க்கரையை சேர்க்காமல் கால் டீஸ்பூன் முதல் அரை டீஸ்பூன் அளவு மருந்தினை எடுத்துக் கொள்ள வேண்டும்.

### உடலின் துர்நாற்றம் குறைய :

50 கிராம் அளவு முத்தக்காசுப்பொடி, வெட்டி வேர் பொடி, கந்தகப் பொடி ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு பக்கெட் நீரில் 2–4 டீஸ்பூன்

பொடியை கலந்து குளித்து வந்தால் உடலின் துர்நாற்றம் நீங்கும்.

**சாதாரண இருமல் குறைய :**

20 கிராம் முத்தக்காசு பொடியுடன் 20 கிராம் மிளகுப் பொடியை கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் 2–3 முறை, வேளைக்கு ஒரு கிராம் பொடியினை தகுந்தளவு தேனுடன் கலந்து உட்கொண்டால் இருமல் குறையும்.

**மூட்டு வலிகள் குறைய :**

50 கிராம் முத்தக்காசு பொடி, 50 கிராம் அஸ்வகந்தம் பொடி ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு, வேளைக்கு 200 மி.லி. நீரில் ஒரு டீஸ்பூன் பொடியை சேர்த்து 10 மி.லி. ஆகும் வரை நன்கு சுண்டக்காய்ச்சி வடிகட்டி இரண்டு டீஸ்பூன் தேனுடன் கலந்து குடித்தால் மூட்டு வலி குறையும்.

**தாகம் குறைய :**

முத்தக்காசு பொடி 10 கிராம், ஏலக்காய் பொடி 10 கிராம் ஆகியவற்றை கலந்து வைத்துக்கொண்டு நாள்தோறும் 2 வேளை ஒரு கிராம் பொடியை தகுந்தளவு தேனுடன் குழைத்து சாப்பிட்டால் தாகம் குறையும்.

**உடல் எடை குறைய :**

100 கிராம் முத்தக்காசு பொடியில் 25கிராம் ஓமத்தை நன்கு வறுத்து பொடி செய்து கொள்ள வேண்டும். நாள்தோறும் காலை, மாலை 2 வேளை 2–3 கிராம் பொடியை தேனுடன் கலந்து உட்கொண்டால் உடல் எடை குறைந்து மூட்டு வலிகளும் குறையும்.

**ஐ.பி.எஸ் என்ற வயிற்றுப்போக்கு குறைய :**

நாள்தோறும் 2 முறை 200 மி.லி. நீரில், 5 கிராம் முத்தக்காசுப் பொடியை கலந்து 100 மி.லி. ஆகும் வரை கொதிக்க வைத்து வடிகட்டி உட்கொண்டால் சாப்பிட்டவுடன் ஏற்படுகின்ற வயிற்றுப்போக்கு, பயணம் செய்யும் போது உண்டாகின்ற வயிற்றுப் போக்கு, மனக்குழப்பம், மன அழுத்தம் ஆகியவற்றால் ஏற்படும் வயிற்றுப்போக்கு, உடலிற்கு ஒவ்வாத உணவுகளை உண்பதால் ஏற்படும் வயிற்றுப்போக்கு ஆகியவை குறையும்.

**சரும வியாதிகள் நீங்க :**

முத்தக்காசு பொடி, மஞ்சள் பொடி ஆகியவற்றை 25 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு காலை, மாலை 2 வேளை, 1–2 கிராம் பொடியை தேனுடன் கலந்து உட்கொண்டால் தோல் சம்பந்தப்பட்ட சொறி, சிரங்கு, படர்தாமரை, அரிப்பு போன்ற தோல் வியாதிகள் குறையும். இம்மருந்தை 50 மி.லி. வெதுவெதுப்பான பாலுடனும் சேர்த்து குடிக்கலாம்.

ஷடங்க பானீயம், கங்காதரப் பொடி, முஸ்தகாரிஷ்ட பொடி போன்ற ஆயுர்வேத மருந்துகளின் தயாரிப்பில் இந்த முத்தக்காசுப் பொடியை உபயோகிக்கின்றனர்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர்வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.





## வெற்றிலை

**வெற்று + இலை = வெற்றிலை. இந்த தாவர வகையில் வெறும் இலை மட்டுமே பார்க்க இயலும். வெற்றிலையின் காம்பிலிருந்து வளைந்து செல்லும் இலை அமைப்பு வலது பக்கம் அதிகமாக இருந்தால், அது ஆண் வெற்றிலை எனப்படும். இரண்டு பக்கமும் சமவளைவு கொண்ட வெற்றிலை 20 சதவீதம் தான் உண்டு. இப்படிப்பட்ட வெற்றிலையை சிவசக்தி இலை என்பார்கள். இதை இறைவனுக்குப் படைப்பது மிகவும் விசேஷமாகும். வெற்றிலையில் உள்ள நரம்பு உடலில் உள்ள சக்தி செல்களை (வெள்ளை அணுக்கள்) அழித்து விடும் என்பதால் தான் தாம்பூலம் தரிக்கும்போது நரம்பை எடுக்க வேண்டும்.**



சிறுவர் பகுதி

# (ஓர் ஏழையின் கதை)

சிற்றின்பமும் பேரின்பமும்



காசி நகரத்தில் ஓர் ஏழை பிழைக்க வழியற்று வருந்திக் கிடக்கையில், அவ்வூரிலுள்ள ஒரு தரும நிதியிலிருந்து மாதம் தோறும் அவனுக்கு உதவிப் பணம் கிடைக்குமாறு சில பெரியோர் செய்ய, அவன் ஒருவாறு ஜீவித்திருந்தான்.


ஒரு நாள் பின்னிரவில் அவன் ஒரு லக்ஷ ரூபாய் தனக்குக் கிடைத்ததாக கனவு கண்டு, அக்கனவிலேயே அவன் தனது ஏழ்மை நீங்கிச் செல்வம் விஞ்சியவனாக நினைத்துக் கொண்டான். இனி நாம் தரும நிதியிலிருந்து உதவிப் பணம் பெறுவது தகுதியல்ல என்றும் நினைத்தான். இந்த லக்ஷ ரூபாயில் பெருமையாக வாழலாம் என்று பாரித்தான். பங்களா, கார் வாங்கி, வேலைக்காரர்களை வைத்துக் கொள்ளலாம் என்று யோசித்துக் கொண்டே கிடைத்த லக்ஷ ரூபாய்களைச் சேமித்து வைக்க ஆரம்பித்து, நோட்டுக்களை எண்ணி கட்டுக்கட்டாக ஒரு பக்கம் வைத்தான். இப்படி இவன் கனாக்கண்டு களித்திருக்கும் பொழுது இவனது வீட்டுக் கதவு திறக்கப்பட்டது. இவனுக்கு மாதம் தோறும் உதவிப் பணம் கொண்டு கொடுக்கும் தரும நிதிச் சேவகன் உள்ளே வந்து "இதோ இந்த மாதத்தின் உதவிப் பணம்" என்று சொல்லிக் கொடுக்க வந்தான். இத்தருணம் இவ்வேழை மனிதன், பாதி கனவாகவும், பாதி நினைவாகவுமிருக்கும் நிலைமையாதலால், அப்பா! இனி எனக்கு உங்கள் தரும நிதிப் பணம் தேவையில்லை. என்னிடம் நிரம்ப ரூபாய்கள் இருக்கின்றன. என் பெயரை பட்டியலில் இருந்து நீக்கி விடலாம் என்றான். அது கேட்டுச் சேவகன் போய் விட்டான். அந்த தரும நிதியளிப்போரும் அவ்ஏழையின் பெயரை நீக்கி விட்டார். கனாக்கண்ட அவ்வேழை மனிதன் விழித்துக் கொண்டான். கண்ட கனவை மறந்து நித்தியக் கடமைகளைச் செய்யத் தொடங்கினான். அன்று அம்மாதத்தின் முதல் தேதி. பொழுது விடிந்து சிறிது நேரமாயிற்று. ஆறு மணிக்கே தரும நிதிச் சேவகன் பணம் கொணர வேணுமே; இவ்வளவு நேரமாகியும் சேவகன் ஏனோ வரவில்லை என எண்ணினான்.

இன்று அச்சேவகனுக்கு வேறு வேலை ஏதாவது ஏற்பட்டிருக்கும். நாளை கட்டாயம் வருவான் என்று மறு நாளுக்காகக் காத்திருந்தான். இப்படியே நான்கு நாட்கள் கழிந்தன. அவ்வேழை மனிதன் பல தொல்லைகளினால் மிகவும் பீடிக்கப்பட்டு வருந்தினான். ஐந்தாம் தேதி தரும நிதிக்கே நேரில் சென்று நிதித்தலைவரைக் கண்டான். "தங்கள் பணத்தையே நம்பி வாழும் எனக்கு இம்மாதம் ஐந்து தேதி ஆகியும் பணம் வரவில்லையே! என்ன காரணம்? என்று அழுதான். அது கேட்ட நிதித் தலைவர், "அப்பா! முதல் தேதி காலை ஆறு மணிக்கு வழக்கம் போல் நிதியின் சேவகன் பணத்தோடு உன் வீட்டிற்கு வந்தான். அன்று, "என்னிடத்தில் நிறைய ரூபாய்கள் இருக்கின்றன. எனக்கு இனி உதவிப் பணம் தேவையில்லை. என் பெயரை பட்டியலிலிருந்து நீக்கி விடு" என்று அவனிடம் நீ சொன்னாயாம். அதனால் அந்த ரூபாயை வேறொரு ஏழைக்குத் தர ஏற்பாடு செய்து விட்டேன்" என்று தலைவர் சொல்லவும், அதிர்ந்து போன அவ்வேழை தான் தூக்கத்தில் கண்ட கனவைச் சொல்லி, தான் பணத்தை மறுத்த காரணத்திற்காக தன்னை மன்னித்து, பழைய படி நிதி உதவி செய்யுமாறு பல முறை கெஞ்சியும் வேறு ஏழைக்கு ஏற்பாடாகி விட்டபடியால் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று மறுத்து விட்டார். இரண்டு நொடிப்பொழுது அளவு கூட மகிழ்ச்சி தர முடியாத கனவுக் கண்டு நீண்ட காலம் சுகானுபவத்துக்குரிய பணத்தை மறுத்த அவ்வேழையின் நிலைமை பரிதாபத்துக்குரியதன்றோ!

நீதி : இந்த இருள் தருமா ஞாலமாகிய சம்சாரத்தில், விஷயாந்தரங்களினால் நமக்கு நேரக் கூடிய இன்ப துன்பங்களெல்லாம் கனவிற்காணும் பொருட்கள் போன்று குறுகிய காலமே இருக்கக்கூடியவை என்றும் அவற்றுக்கு ஆசைப்பட்டு நீண்ட காலம் நாம் அனுபவிக்கக்கூடிய மோக்ஷ சுகத்தைக் காலால் உதைத்துத் தள்ளுவது கூடாது. ஆதியந்தமில்லாத நித்ய வஸ்துவாகிய ஜீவாத்மாக்களுக்கு ஒவ்வொரு பிறவியிலும் ஏற்படுகின்ற ஆயுட்பாகமும் அற்பம்; அதனுள் அநுபவிக்கும் பொருட்களும், சுக துக்கங்களும் மின்னல் போல் மிளிர்ந்து மறையும். ஆகையால் அந்தமில் பேரின்பமான மோக்ஷ சுகத்தை நாடி சம்சார சுகத்தில் ஈடுபடாமல் உயர்கதிக்கு முயற்சி செய்வதே மானிடர்களின் கடமையாகும்.



– திருமதி பிரேமா வரதன்,
புதுதில்லி, 98997 13565



சித்திரக் கதை
உத்தம புத்திரன்
கதை மூலம் : டாக்டர் கே. ரவிச்சந்திரன்
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்
சித்திரம் : திரு.பி. துளசிபிரசாத்
01 அஸ்தினாபுரம் மகாராஜா சந்தனுவிற்கும், கங்கா தேவிக்கும் பிறந்தவர் தேவவிரதன். குழந்தை பிறந்தவுடனே அக்குழந்தையை சொர்க்கத்திற்கு கங்கா தேவி கொண்டு சென்றாள். கல்வியை கற்பித்த பின்பு தேவவிரதனை தந்தையிடம் சேர்ப்பித்தாள். சந்தனு தன் மகனை இளவரசனாக்கி மகிழ்ந்தார்.
02 ஒரு நாள் சந்தனு யமுனை நதிக் கரையில் உலாவிக் கொண்டிருந்தார். அங்கு மத்ஸ்யகந்தி எனும் படகோட்டும் இளம் மங்கையைக் கண்டு, திருமணம் செய்து கொள்ள எண்ணினார்.
03 என்னை மணந்து கொள்கிறாயா?
04 என் தந்தை ஒப்புக்கொண்டால்...
05 தாசராஜா! உன் மகளை எனக்கு திருமணம் செய்து வையுங்கள்.
06 தங்களைப் போன்ற மருமகன் கிடைத்தால் எனக்கு இதைவிட வேறு என்ன வேண்டியிருக்கிறது. ஆனால், என் மகளுக்குப் பிறக்கும் பிள்ளையையே தங்களுக்குப் பிறகு அரசாள வைக்க உறுதி அளித்தால் என் மகளை தங்களுக்கு அளிக்கிறேன்.
07 ஐயோ! தோளுக்கு மேல் வளர்ந்த மகன் இளவரசனாக இருக்கும் போது நான் எப்படி தாசராஜனின் நிபந்தனையை ஏற்பது இத்துன்பம் தீருவது எப்படி?
08 தேவவிரதன் தேரோட்டியின் மூலமாக தன் தந்தையின் வருத்தத்திற்கான காரணத்தை கேட்டறிந்தான்.
09 தாசராஜா! உன் மகளை என் தந்தைக்கு மணம் முடித்து வையுங்கள்.
10 இளவரசே! என் நிபந்தனைகளை தங்கள் தந்தையிடம் கூறியுள்ளேன்.
11 நான் இந்நொடி முதல் அரசுரிமையை விட்டு விடுகிறேன். எச்சூழ்நிலையிலும் தங்கள் மகளின் வாரிசே எனக்கும் அரசனாக இருப்பான்.
12 இது போன்ற வாக்குறுதியை அனைவரும் அளிப் பார்களா? நீங்கள் அரசுரிமை வேண்டாமென்றா லும் உங்கள் வாரிசுகள் ஒப்புக் கொள்வார்களா?
13 அப்படியானால் என் வாழ்நாள் முழுவதும் திருமணமே செய்து கொள்ளாமல் பிரம்மச்சாரி யாகவே இருப்பேன். இனி எவ்வித சந்தேகமுமின்றி இத்திருமணத்திற்கு தாங்கள் ஒத்துக் கொள்ளுங்கள்.




14

ஆகாயத்திலிருந்து பூமழை பெய்தது. தேவதைகள் தோன்றி, தந்தையின்சந்தோஷத்திற்காக தன் சந்தோஷத்தையும் அதிகாரத்தையும் தியாகம் செய்த தேவவிரதனை போற்றினர். பீஷணமான வாக்குறுதியை அளித்தாய் எனவே இனி நீ பீஷ்மர் என்று அழைக்கப்படுவாய்.

15

தாசராஜன் மகிழ்ச்சியுடன் சத்யவதியை சந்தனுக்கு மணம் முடிக்க ஒப்புக் கொண்டு அவளை பீஷ்மருடன் அஸ்தினாபுரத்திற்கு அனுப்பி வைத்தான்.





சபையோர்களே! ஒரே ஒரு பிள்ளை மட்டும் இருந்தால் பிள்ளையே இல்லாததற்கு சமமாகும். எனவே மகாராஜா அவர்கள் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு திருமணம் செய்து கொள்வது அனைவருக்கும் மகிழ்ச்சியே!

16



17

சத்யவதி சந்தனு திருமணத்தை பீஷ்மர் நடத்தி வைத்தார்.






19

நமோ தியாகசீல பீஷ்மா!
நமோபுண்ணிய புருஷா!
சொன்ன வாக்கை வாழ்நாள் முழுவதும் கடைபிடித்த உத்தமனே!
அகிலலோக புருஷா!
உன் சரித்திரம் அனைவருக்கும் வழிகாட்டியாக அமையட்டும்.

அடுத்த இதழில் மற்றொரு கதையைப் பார்த்து படித்து மகிழ்வோம்!

முற்றும்.

## வினா விடை

1. மதுரகவியாழ்வாரின் அவதார ஸ்தலம் எது?
அ) திருக்கூடல் ஆ)திருமோகூர் இ) திருக்கோளூர்

2. காஞ்சிபுரம் நகரத்திலுள்ள திவ்ய தேசங்கள் எத்தனை?
அ) 10 ஆ) 14 இ) 16

3. சரணாகதி கத்யம் என்னும் நூலை இயற்றியவர் யார்?
அ) பெரிய நம்பிகள் ஆ) யாதவப் பிரகாசர் இ) ஸ்ரீராமாநுஜர்

4. நடுநாட்டில் உள்ள திவ்ய தேசங்கள் எத்தனை?
அ) 2 ஆ) 4 இ) 8

5. கல்கருடன் அமைந்துள்ள திவ்யதேசம் எது?
அ) திருவைகுண்டம் ஆ)திருமெய்யம் இ) திருநறையூர்

6. திருமங்கையாழ்வாரின் அவதார திருநட்சத்திரம் எது?
அ) கிருத்திகை ஆ) ரோகிணி இ) திருவோணம்


7. ஸ்ரீராமாநுஜரின் தாமுகந்த திருமேனி அமைந்துள்ள தலம் எது?
அ) திருக்கச்சி ஆ) ஸ்ரீபெரும்புதூர் இ) திருப்புட்குழி

தொகுப்பு : திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்

**விடைகள்**
1) இ, 2) ஆ, 3) இ, 4) அ, 5) இ, 6) அ, 7) ஆ

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...

*Edited and Published on behalf of T.T.Devasthanams by* ***Prof. K.Rajagopalan****, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by* ***Sri. P. Ramaraju,*** *M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*




உலக நன்மைக்காகவும், கொரோனா தொற்று பரவலிலிருந்து உலகம் இயல்பு நிலைக்குத் திரும்பவும் 15-12-2020 அன்று திருப்பதி எஸ்.வி.வேத பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தனபிரத ஸ்ரீமஹாவிஷ்ணு யாகத்தில் கலந்து கொண்ட தி.தி.தே. செயலாட்சித்தலைவர் மற்றும் கூடுதல் செயலாட்சித்தலைவர்



10-01-2021 முதல் 14-01-2021 வரை திருமலை வசந்த மண்டபத்தில் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீநிவாச பெருமாளுக்கு நடைபெற்ற வில்வ பத்ர அர்ச்சனை



14-01-2021 அன்று தி.தி.தே.நிர்வாக அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ஸ்ரீகோதா கல்யாணத்தில் கலந்து கொண்ட தி.தி.தே. செயலாட்சித் தலைவர், தி.தி.தி.கூடுதல் செயலாட்சித்தலைவர், பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்



15-01-2021 அன்று திருமலையில் நடைபெற்ற பார்வேட்டை உத்ஸவத்தில் பங்கு கொண்ட தி.தி.தே.கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மா ரெட்டி அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்


தேவுனிகடபா
ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர
ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
2021 பிப்ரவரி
13 முதல் 21 வரை